# தொல்காப்பியம்

## எழுத்ததிகாரம்

## சொல்லதிகாரம்

கா. நமச்சிவாய முதலியார்
பதிப்பித்தது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1922
விலை ரூபாய் ஒன்று

Printed at
The 'Caxton Press,'
Madras, E.

# முன்னுரை :

நன்னூல் முதலிய பின்னூல்கள் தோன்றவும் தொன்னூலாய தொல்காப்பியத்தின் வழக்காறு மழுங்கியது. மழுங்கவே, சங்கம் மருவிய நூல்களின் ஆராய்ச்சி குன்றியது. குன்றவே, பண்டைத் தமிழ்மக்களின் அன்பு ஆண்மை முதலியவற்றின் உண்மை மறைவதாயிற்று. ஆகவே, சாதிசமய வேறுபாடுகள் பல்லாற்றானும் பல்கிப் பரவின. அவற்றால் இக்காலத்தே ஏற்பட்டுள்ள இடையூறுகள் பலவாம் என்பதனை அறிஞர் அறிவர்.

தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணத்தைத் தழுவி இலக்கணவிளக்கம் என்னும் அரிய நூல் ஒன்று பிற்காலத்தே தோன்றிப் பெரிதும் பயன்பட்டு வந்தது. ஆசிரியர் சிவஞான முனிவர் நன்னூலைப் பெரிதும் பாராட்டி, அதற்கோர் விருத்தியுரை கூட்டித் திகழச் செய்ததுமன்றி, இலக்கண விளக்கச் சூறாவளி என்னும் மறுப்புநூல் ஒன்றையும் காட்டியபின்னர் அவ்விலக்கண விளக்கப் பயிற்சியும் குறைவுற்றது. அதன் பின்னர் நன்னூல் ஒன்றே நின்று நிலவுவதாயிற்று. ஆகவே, இக்காலத்தே எழுத்தும் சொல்லும் ஆராய்வதே இலக்கணப் பயிற்சியாக ஏற்பட்டுவிட்டது.

சங்கநூல் முதலியவற்றை ஆராய்ந்து, பண்டைத் தமிழ்மக்களின் வழக்க ஒழுக்கங்களை உண்மையுற அறிதல் வேண்டும் என்னும் அவா அறிஞர் உள்ளத்தில் தோன்றி, அதன் பயனாக இந்நாளில் சிற்சில ஆராய்ச்சி நூல்கள் தோன்றுவன ஆயின. ஆகவே, தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களையும் படித்துத் தேர்தல் வேண்டும் என்னும் நோக்கம் தமிழ்நாட்டில் ஆங்காங்கே கிளைத்திருக்கின்றது. இத்தகைய நன்முயற்சி எழுதற்கு ஆதாரமான பண்டைத் தமிழ் நூல்களைப் பெரிதும் முயன்று அரிதின்

வெளியிட்டுத்தந்த பேரறிவாளர் ராவ்பகதூர் சி. வை. தாமோ-தரம் பிள்ளை யவர்கட்கும் மகா மகோபாத்தியாயர் உத்தம-தானபுரம் வே. சாமிநாத ஐயர் அவர்கட்கும் இத் தமிழுலகம் என்றும் மறவா நன்றிபாராட்டும் கடப்பாடுடையதாகும்.

இக்காலத்தே பண்டைத் தமிழ் இலக்கணங்களும் இலக்-கியங்களும் மூலபாடமாக வெளிவரின் அவை பெரிதும் பய-னுடையவாம் என்பது கருதி, சங்கம் மருவிய இலக்கண இலக்-கியங்களைக் கைச்சுவடிகளாகப் பதிக்கத் தொடங்கியுள்ளேன்.

அவற்றுள், இந்நூல் தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் சேர்ந்தது. இப் பதிப்பில் கடின சந்திகளைப் பிரித்து, அவ்வச் சூத்திரங்கள் நுதலிய பொருளைத் தலைப்பில் அமைத்து, பாட பேதங்களையும் ஆங்காங்கே காட்டி யுள்ளேன். இவ்வாறே மற்றைய நூல்களும் வெளிவரும்.

இம் முயற்சிக்கண் என்னுடன் உழைத்துவரும் தி. சு. கனக சுந்தரம் பிள்ளை அவர்கட்கு நன்றி கூறுகின்றேன். இந்நூல்களை யான் விரும்புமாறு பதித்துவரும் ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் என்னும் கம்பெனியின் அதிபர் ஸி. ஜயராம் நாயுடு அவர்கள் தமிழ் மொழியின்கண் கொண்டுள்ள பேரன்பு பெரிதும் பாராட்-டற்பாலதாம்.

ஏதும் அறியாத இச்சிறியேனை இப்பெரு முயற்சிக்கண் புகுத்தி, தோன்றாத் துணையாய் நின்று அருள்புரியும் தணிகைப் பெருவாழ்வை என் மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்கு-கின்றேன்.

'காவேரியகம்'
சென்னை, 16-3-22.

கா. நமச்சிவாயன்.

# பொருள் அடக்கம் :


பொதுப்பாயிரம் - - - - - vi
சிறப்புப்பாயிரம் - - - - - viii


## எழுத்ததிகாரம்


1. நூன்மரபு - - - - - - 1
2. மொழிமரபு - - - - - - 5
3. பிறப்பியல் - - - - - 10
4. புணரியல் - - - - - - 13
5. தொகைமரபு - - - - - 18
6. உருபியல் - - - - - - 24
7. உயிர்மயங்கியல் - - - - - 28
8. புள்ளிமயங்கியல் - - - - - 40
9. குற்றியலுகரப் புணரியல் - - - 53


## சொல்லதிகாரம்


1. கிளவியாக்கம் - - - - - - 67
2. வேற்றுமையியல் - - - - 76
3. வேற்றுமை மயங்கியல் - - - - 81
4. விளிமரபு - - - - - 86
5. பெயரியல் - - - - - - 90
6. வினை இயல் - - - - - 97
7. இடை இயல் - - - - - 105
8. உரி இயல் - - - - - 112
9. எச்ச இயல் - - - - - - 122


## சூத்திர முதற் குறிப்பு


எழுத்ததிகாரம் - - - - - 133
சொல்லதிகாரம் - - - - 141

## பொதுப்பாயிரம்:

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமும்
திங்க ளன்ன கல்வியும் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவதும்
அஃகா அன்பும் வெஃகா வுள்ளமும்
துலைநா வன்ன சமநிலை யுளப்பட
எண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாஅ ளாண்மையும்
உலகிய லறிதலும் நிலையுயர் தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன்மையும்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலும்
இன்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பல்பெருஞ் சிறப்பின் நல்லா சிரியர்
அறனே *பொருளே அன்பென மூன்றின்
திறனறி பனுவல் செப்புங் காலை
முன்னர்க் கூறிய எண்வகை யுறுப்பினுள்
ஏற்பவை யுடைய ராகிப் பாற்படச்

---

* 'பொருட்பய னின்பெனு மூன்றின்'

சொல்லிய பொருளைச் சொல்லியாங் குணர்தலும்
சொல்லிய வகையொடு சூழ்ந்துநன் கறிதலும்
தன்னோ ரன்னோர்க்குத் தான்பயன் படுதலும்
செய்ந்நன்றி யறிதலும் தீச்சார் பின்மையும்
மடிதடு மாற்றம் மானம் பொச்சாப்புக்
கடுநோய் சீற்றம் களவே காமம்
என்றிவை யின்மையும் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையும் குறிப்பறிந் தொழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டவை வினாதலும் விடுத்தலும் உரைத்தலும்
உடையோ ராகி நடையறிந் தொழுகுநர்
நன்மா ணாக்க ரென்ப மண்மிசைத்
தொன்னூற் பரவைத் துணிபுணர்ந் தோரே.

ஆத்திரேயன் பேராசிரியன் சொன்னது.

# சிறப்புப்பாயிரம்:

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

பனம்பாரனார் சொன்னது.

# எழுத்ததிகாரம்

# தொல்காப்பியம்

## எழுத்ததிகாரம்

### 1. நூன்மரபு

[எழுத்தின் பெயரும் முறையும் தொகையும்]

1. எழுத்தெனப் படுப
அகரமுதல்
னகர இறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே. (க)

[சார்பெழுத்து மூன்றின் பெயர்]

2. அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன. (உ)

[குற்றெழுத்தின் தொகையும் அளவும்]

3. அவற்றுள்
அ-இ-உ
எ-ஒ என்னும் அப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப. (ங)

[நெட்டெழுத்தின் தொகையும் அளவும்]

4. ஆ-ஈ-ஊ ஏ-ஐ
ஓ-ஔ என்னும் அப்பா லேழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப. (௪)

[எழுத்துகளின் மாத்திரை வரையறை]

5. மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே. (௫)

[மாத்திரையின் நீட்டம்]

6. நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர். (௬)

[மாத்திரை இன்னதென்பது]

7. கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே. (௭)

[உயிரெழுத்து இத்துணை யென்பது]

8. ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப. (௮)

[மெய்யெழுத்து இத்துணை யென்பது]

9. னகர இறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப. (௯)

[உயிர் மெய்யெழுத்தின் அளவு]

10. மெய்யோ டியையினும் உயிரியல் திரியா. (௧௦)

[தனிமெய்யின் அளவு]

11. மெய்யி னளபே அரையென மொழிப. (௧௧)

[சார்பெழுத்தின் அளவு]

12. அவ்வியல் நிலையும் ஏனைய மூன்றே. (௧௨)

[மாத்திரையின் குறுக்கம்]

13. அரையளபு குறுகல் மகர முடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை. (௧௩)

[மகரத்தின் வரிவடிவு]

14. உட்பெறு புள்ளி உருவா கும்மே. (௧௪)

[மெய்யெழுத்தின் வடிவு]

15. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல். (௧௫)

[எகர ஒகரத்தின் வடிவு வேற்றுமை]

16. எகர ஒகரத் தியற்கையும் அற்றே. (௧௬)

[உயிர்மெய்யெழுத்து]

17. புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே. (௧௭)

[உயிர்மெய்யெழுத்து ஒலிக்கும் முறை]

18. மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே. (௧௮)

[வல்லெழுத்து]

19. வல்லெழுத் தென்ப க-ச-ட த-ப-ற. (௧௯)

[மெல்லெழுத்து]

20. மெல்லெழுத் தென்ப ங-ஞ-ண ந-ம-ன. (௨௦)

[இடையெழுத்து]

21. இடையெழுத் தென்ப ய-ர-ல வ-ழ-ள. (உக)

[தனிமெய் மயக்கம்]

22. அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை. (உஉ)

[மெய்ம்மயக்கம்]

23. ட-ற-ல-ள என்னும் புள்ளி முன்னர்க்
க-ச-ப என்னும் மூவெழுத் துரிய. (உ௩)

24. அவற்றுள்
லளஃகான் முன்னர் ய-வவுந் தோன்றும். (உ௪)

25. ங-ஞ-ண-ந ம-னஎனும் புள்ளி முன்னர்த்
தத்தம் இசைகள் ஒத்தன நிலையே. (உ௫)

26. அவற்றுள்
ணனஃகான் முன்னர்க்
க-ச-ஞ-ப ம-யவவ் வேழு முரிய. (உ௬)

27. ஞ-ந-ம-வ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே. (உ௭)

28. மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும். (உ௮)

29. ய-ர-ழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். (உ௯)

[உடனிலை மயக்கம்]

30. மெய்ந்நிலைச் சுட்டின் எல்லா எழுத்துந்
தம்முற் றாம்வரூஉம் ர-ழ அலங் கடையே. (௩0)

[சுட்டெழுத்தின் தொகை]

31. அ-இ-உ அம் மூன்றுஞ் சுட்டு. (௩௧)

[வினா வெழுத்தின் தொகை]

32. ஆ-எ-ஓ அம் மூன்றும் வினா. (௩௨)

[எழுத்துக்களின் அளபெடை]

33. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர். (௩௩)

## 2. மொழிமரபு

[ஒருமொழிக் குற்றியலிகரம்]

34. குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்
காவயின் வரூஉம் மகர மூர்ந்தே. (க)

[இருமொழிக் குற்றியலிகரம்]

35. புணரியல் நிலையிடைக் குறுகலு முரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும். (உ)

[ஒருமொழிக் குற்றியலுகரம்]

36. நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே. (௩)

[குற்றியலுகரக் குறுக்கம்]

37. இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான. (௪)

[ஒருமொழி ஆய்தம்]

38. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. (௫)

[புணர்மொழி ஆய்தம்]

39. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும். (௬)

[ஆய்த அளபெடையும் சுருக்கமும்]

40. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தி னியலா
ஆய்த மஃகாக் காலை யான. (௭)

[அளபெடையின் வரிவடிவு]

41. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே. (௮)

42. ஐ-ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்
கிகர உகரம் இசைநிறை வாகும். (௯)

[ஓரெழுத் தொருமொழி]

43. நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி. ()

[உயிர்க் குற்றெழுத்து மொழியாகாமை]

44. குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே. (௧௧)

[மொழியின் வகை]

45. ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே (௧௨)

[மெய்யெழுத்து ஒலிக்கும் முறை]

46. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும். (௧௩)

[மெய்ம்மயக்கத்துக்குப் புறனடை]

47. தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மான மில்லை. (கச)

[ஈரொற் றுடனிலை]

48. ய-ர-ழ என்னு மூன்று * மொற்றக்
க-ச-த-ப ங-ஞ-ந-ம ஈரொற் றாகும். (கரு)

49. அவற்றுள்
ரகார ழகாரங் குற்றொற் றாகா. (கசு)

50. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல. ()

[மகரக் குறுக்கம்]

51. செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும். (கஅ)

52. னகாரை முன்னர் மகாரங் குறுகும். (ககூ)

[ஓசை வேற்றுமையால் எழுத்தின் மாத்திரை திரியாமை]

53. மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே [றிசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர். (உ0)

[போலி எழுத்து]

54. அகர இகரம் ஐகார மாகும். (உக)

55. அகர உகரம் ஔகார மாகும். (உஉ)

* 'முன்னொற்ற' எனவும் பாடம்.

56. அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும். ()

57. இகர யகரம் இறுதி விரவும். (உச)

[ஐகார ஔகாரங்களின் சுருக்கம்]

58. ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான. (உரு)

[மொழிக்கு முதலாம் எழுத்துக்கள்]

59. பன்னீ ருயிரும் மொழிமுத லாகும். (உசு)

[மொழிக்கு முதலாகா எழுத்துக்கள்]

60. உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா. (உஎ)

[உயிர்மெய்யுள் மொழிக்கு முதலாகும் எழுத்துக்க
ளின் வரையறை]

61. க-த-ந ப-ம எனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே. (உஅ)

62. சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ-ஐ-ஔ எனும் மூன்றலங் கடையே. (உசு)

63. உ-ஊ ஒ-ஓ என்னும் நான்குயிர்
வ என் னெழுத்தொடு வருத லில்லை. (ந௦)

64. ஆ-எ
ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய. (நக)

65. ஆவோ டல்லது யகரமுத லாது. (நஉ)

[மொழிக்கு முதலாகா எழுத்துக்குப் புறனடை]

66. முதலா ஏன தம்பெயர் முதலும். (௩௩)

[மொழிமுதற் குற்றியலுகரம்]

67. குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் (௩௪)

68. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ
தப்பெயர் மருங்கின் நிலையிய லான. (௩௫)

[மொழிக்கு ஈறாகும் உயிரெழுத்து]

69. உயிர்ஔ எஞ்சிய இறுதி யாகும். (௩௬)

70. கவவோ டியையின் ஔவு மாகும். (௩௭)

71. எ என வருமுயிர் மெய்யீ றாகாது. (௩௮)

72. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே. (௩௯)

73. ஏ-ஒ எனுமுயிர் ஞகாரத் தில்லை. (௪0)

74. உ-ஊ காரம் நவவொடு நவிலா. (௪௧)

75. உச்ச காரம் இருமொழிக் குரித்தே. (௪௨)

76. உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட் டாகுமே. (௪௩)

77. எஞ்சிய எல்லாம் எஞ்சுத லிலவே. (௪௪)

[மொழிக்கு ஈறாகும் மெய்யெழுத்துக்கள்]

78. ஞ-ண-ந-ம ன-ய-ர-ல வ-ழ-ள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி. (௪௫)

79. உச்ச காரமொடு நகாரஞ் சிவணும். (சசு)

80. உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொரு ளிரட்டா திவணை யான. (சஎ)

81. வகரக் கிளவி நான்மொழி யீற்றது. (சஅ)

[மகரம் போலியாகாத னகர ஈற்றுச் சொற்களின் தொகை]

82. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன. (சகூ)

## 3. பிறப்பியல்

[பொது வகையான் எழுத்துக்களின் பிறப்பு]

83. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்துஞ் சொல்லுங் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான. (க)

[உயிரெழுத்துக்கள் பிறக்கும் இடமும் முயற்சியும்]

84. அவ்வழி *
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும். (உ)

* 'அவ்வழிப்' எனவும் பாடம்.

85. அவற்றுள்
அ-ஆ ஆயிரண் டங்காந் தியலும் (௩)

86. இ-ஈ எ-ஏ ஐயென இசைக்கும்
அப்பா லைந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதனா விளிம்புற லுடைய. (௪)

87. உ-ஊ ஒ-ஓ ஔவென இசைக்கும்
அப்பா லைந்தும் இதழ்குவிந் தியலும். (௫)

88. தத்தந் திரிபே * சிறிய வென்ப. (௬)

[மெய்யெழுத்துக்கள் பிறக்கும் இடமும் முயற்சியும்]

89. ககார ஙகாரம் முதனா அண்ணம். (௭)

90. சகார ஞகாரம் இடைநா அண்ணம். (௮)

91. டகார ணகாரம் நுனிநா அண்ணம் (௯)

92. அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின. (௧௦)

93. அண்ணம் நண்ணிய பன்முதன் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம். (௧௧)

94. அணரி நுனிநா அண்ண மொற்ற
றஃகா னஃகான் ஆயிரண்டும் பிறக்கும். (௧௨)

95. நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரமாய் இரண்டும் பிறக்கும். (௧௩)

* 'அவைதாம் தத்தந்திரிபே' எனவும் பிரதிபேதம்.

96. நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும். (கசு)

97. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம். (கரு)

98. பல்லித ழியைய வகாரம் பிறக்கும். (கசா)

99. அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும். (கள)

100. மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும். (கஅ)

[சார்பெழுத்துக்கள் பிறக்குமிடம்]

101. சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும். (கக)

[பிறப்பியலின் புறநடை]

102. எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
* அஃதிவண் நுவலா தெழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே (உ0)

* இச் சூத்திரத்தை இளம்பூரணர் ஈண்டுப் பிரித்து இரண்டாகக் கொள்வர்.

# 4. புணரியல்

[மொழிகளின் முதலும் ஈறும்]

103. மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலா கிருபஃ
தறுநான் கீறொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியு முதலும்
மெய்யே உயிரென் றாயீ ரியல. (க)

[மெய்யீறு இது என்பது]

104. அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல். (உ)

[குற்றியலுகர ஈறு]

105. குற்றிய லுகரமும் அற்றென மொழிப. (ங)

[உயிர்மெய்யீறு]

106. உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே. (ச)

[நிலைமொழியும் வருமொழியும்]

107. உயிரிறு சொன்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொன்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொன்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்
றிவ்வென வறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்
றாயீ ரியல புணர்நிலைச் சுட்டே. (ரு)

[இயல்புப் புணர்ச்சியும் திரிபுப் புணர்ச்சியும்]

108. அவற்றுள்
நிறுத்த சொல்லின் ஈறு கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்

பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிட னொன்றே யியல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் ரியல்பே. (௬)

[புணர்ச்சியின் வகை]

109. அவைதாம்
மெய்பிறி தாதன் மிகுதல் குன்றலென்
றிவ்வென மொழிப திரியு மாறே. (௭)

[இருமொழிப் புணர்ச்சிக்குப் புறனடை]

110. நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய.

[மரூஉமொழிப் புணர்ச்சி]

111. மருவின் றொகுதி மயங்கியன் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே. (௯)

[மிக்குப் புணரும் புணர்ச்சியின் வகை]

112. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை யாயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை. (௧௦)

[வேற்றுமைப் புணர்ச்சி]

113. ஐ-ஒடு கு-இன் அது-கண் என்னும்
அவ்வா றென்ப வேற்றுமை யுருபே. (௧௧)

[மிக்கும் புணரும் வேற்றுமைப் புணர்ச்சி]

114. வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும். ()

[அது உருபில் அகரம் கெடுமிடம்]

115. ஆற னுருபின் அகரக் கிளவி
ஈறு ககரமுனைக் கெடுதல் வேண்டும். (கங)

[வேற்றுமை உருபு நிற்குமிடம்]

116. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே. (கச)

[பெயரின் வகை]

117. உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே. (கரு)

[சாரியை வருமிடம்]

118. அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே. (கசா)

[சாரியை வகை]

119 அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன வென்ப சாரியை மொழியே. (கஎ)

[இன் சாரியையில் இகரம் கெடுமிடம்]

120. அவற்றுள்
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்து மாகும். (கஅ)

[இன்சாரியை யீறு திரியுமிடம்]

121. அளவாகு மொழிமுதல் நிலைஇய வுயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலத்தே. (கக)

[வற்றுச்சாரியையில் வகரம் கெடுமிடம்]

122. வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லைம்முன்
அஃகா னிற்ற லாகிய பண்பே. (உ0)

[னகரஈற்றுச்சாரியை ஈறு திரியுமிடம்]

123. னஃகான் றஃகான் நான்க னுருபிற்கு. (உக)

[ஆன்சாரியை பொருட்புணர்ச்சிக்கண் ஈறு திரியுமிடம்]

124. ஆனின் னகரமும் அதனோ ரற்றே
நாண்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கே. ()

[அத்துசசாரியை முதல் திரியுமிடம்]

125. அத்தின் அகரம் அகரமுனை யில்லை. (உங)

[இக்குச்சாரியை முதல் திரியுமிடம்]

126. இக்கின் இகரம் இகரமுனை யற்றே. (உச)

127. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும். (உரு)

[அக்குச்சாரியை ஈறு கெடுமிடம்]

128. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது. (உசா)

[அம்முச்சாரியை ஈறு திரியுமிடம்]

129. அம்மின் இறுதி க-ச-தக் காலைத்
தன்மெய் திரிந்து ங-ஞ-ந வாகும். (உஎ)

130. மென்மையும் இடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர். (உ அ)

[இன் சாரியை கெடுமிடம்]

131. இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை இன்மை வேண்டும். (உ கூ)

[சாரியை வருமிடம்]

132. பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா
திடைநின் றியலுஞ் சாரியை யியற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும். ()

[அத்தும் வற்றும் வருமிடத்து நிகழும் விகாரம்]

133. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே. ()

[எழுத்துக்கள் பெறும் சாரியை]

134. காரமுங் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை. (ந உ)

[நெட்டெழுத்துப் பெறாத சாரியை]

135. அவற்றுள்
கரமுங் கானும் நெட்டெழுத் திலவே. (ந ந)

[குற்றெழுத்துப் பெறும் சாரியை]

136. வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய. ()

[ஐகார ஒளகாரங்கள் கான சாரியை பெறுதல்]

137. ஐ கார ஒள காரங் கானொடுந் தோன்றும். ()

[மெய்யோடு உயிர் புணரும்]

138. புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே. ()

[உயிரைவிட்டு மெய் பிரிதல்]

139. மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும். (௩௭)

[உடம்படுமெய் தோன்றுமிடம்]

140. எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார். ()

[இசை வேற்றுமையால் பொருள் வேறுபடல்]

141. எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையிற் றிரிதல் நிலைஇய பண்பே. (௩௯)

142. அவைதாம்
முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன என்னும் எழுத்துக்கட னிலவே. (௪0)

## 5. தொகைமரபு

[வல்லெழுத்து வரின் மெல்லினந் தோன்றுதல்]

143. க-ச-த-ப முதலிய மொழிமேற் றோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ங-ஞ-ந-ம என்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான. (௧)

[மெல்லெழுத்தும் இடையெழுத்தும் வரின் இயல்
பாதல்]

144. ஞ-ந-ம-ய வ எனு முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே. (உ)

[மெல்லெழுத்து இயல்பாதலேயன்றியும் உறழ்ந்தும்
வருதல்]

145. அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதி யான. (ந)

[யகரத்துக்கு ஞகரம் போலியாய் வருதல்]

146. ணன என் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர் (ச)

[ணகார னகார ஈறுகள் அல்வழிக்கண் இயல்பாய்
நிற்றல்]

147. மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே. (ரு)

[ண-னக்கள் வேற்றுமைக்கண் இயல்பாய் நிற்கும்
இடம்]

148. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூ றியற்கை ஆவயி னான. (சா)

[லகார னகார மெய்கள் ற-ன வாகத் திரியுமிடம்]

149. ல-ன என வரூஉம் புள்ளி முன்னர்த்
த-ந எனவரிற் ற-னவா கும்மே. (எ)

[ணகார ளகார மெய்கள் ட-ண வாகத் திரியுமிடம்]

150. ண-ளஎன் புள்ளிமுன் ட-ணஎனத் தோன்றும்.

[முன்னிலை வினைச்சொல் வல்லெழுத்தொடு புணருமாறு]

151. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே. (௯)

152. ஔ என வரூஉம் உயிரிறு சொல்லும்
ஞ-ந-ம-வ என்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே. (௧0)

[உயர்திணைப்பெயர் புணருமாறு]

153. உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப. (௧௧)

154. அவற்றுள்
இகரஈற் றுப்பெயர் திரிபிட னுடைத்தே. (௧௨)

[விரவுப் பெயர் புணருமாறு]

155. அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா றுளவே. ()

[மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி]

156. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மி னாகிய தொழிற்சொன் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை யிரண்டும் உரியவை யுளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும். (௧௪)

[இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி]

157. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்
சாரியை யியற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்வியல் நிலையலும்
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்
அன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப. (கரு)

[இகர ஐகார ஈற்றுப் பெயர்கள் அல்வழிக்கண் புணருமாறு]

158. வேற்றுமை யல்வழி இ-ஐ என்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைஇய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர். (கசு)

[இகர ஐகார ஈற்று ஏழாம் வேற்றுமை இடைச்சொல் புணருமாறு]

159. சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்
யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்
சொல்லியன் மருங்கின் உளவென மொழிப. (கஎ)

[நெடின் முன்னும் குறின் முன்னும் வரும் ஒற்றுப் புணருமாறு]

160. நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலுங்
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்
அறியத் தோன்றிய நெறியிய லென்ப. (கஅ)

[குறின்முன் வரும் ஒற்று இரட்டாத இடம்]

161. ஆற னுருபினும் நான்க னுருபினுங்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை
ஈறுசு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னன. (கக)

162. நும்மென் இறுதியும் அந்நிலை திரியாது. (உ0)

[யகரமும் உயிரும் வரும்வழி புள்ளியிறுதி உகரம் பெறுமை]

163. உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் வருவழி யியற்கை. (உக)

[அளவுப் பெயரும் நிறைப் பெயரும் எண்ணுப் பெயரும் புணருமாறு]

164. உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை. (உஉ)

[மேற்கூறிய பெயர்கள் அரை யென்னுஞ் சொல்லொடு புணருமாறு]

165. அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றாற் சாரியை யியற்கை. (உங)

[மேற்கூறிய பெயர்கள் குறை யென்னுஞ் சொல்
லொடு புணருமாறு]

166. குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை. (உ௪)

167. குற்றிய லுகரக் கின்னே சாரியை. (உ௫)

168. அத்திடை வரூஉங் கலமென் அளவே. (உ௬)

169. பனையென் அளவுங் காவென் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும். (உ௭)

[அளவுப் பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் முதலாம்
எழுத்து]

170. அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்
க-ச-த-ப என்று ந-ம-வ என்று
அகர உகரமோ டவையென மொழிப. (உ௮)

[இவ்வோத்திற்குப் புறனடை]

171. ஈறியன் மருங்கின் இவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை யுரிய புணர்மொழி நிலையே. (உ௯)

[யார் யாவது என்னுஞ் சொன் முடிபு]

172. பலரறி சொன்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரங் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொன்முன் யாதென் வினவிடை
ஒன்றிய வகரம் வருதலு மிரண்டும்
மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே. (௩௦)

# 6. உருபியல்

[அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஆறு ஈற்றுப் பெயர்களும் வேற்றுமை உருபோடு புணரும் போது இன்சாரியை பெறுதல்]

173. அ-ஆ உ-ஊ ஏ-ஔ என்னும்
அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை. (க)

[பன்மைப் பெயர்களின் இறுதி அகரம் வற்றுச் சாரியை பெறுதல்]

174. பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்றொடு சிவணல் எச்ச மின்றே. (உ)

[யா என்னும் வினாப்பெயரும் வற்றுச் சாரியை பெறுதல்]

175. யாவென் வினாவும் ஆயியல் திரியாது. (ங)

[உகர ஈற்றுச் சுட்டுப்பெயர் அன்சாரியை பெறுதல்]

176. சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே. (ச)

[ஐகார ஈற்றுச் சுட்டுப் பெயர் வற்றுச் சாரியை பெறுதல்]

177. சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே. (ரு)

[ஐகார வீற்று வினாப் பெயரும் வற்றுச் சாரியை பெறுதல்]

178. யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
ஆயியல் திரியா தென்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே. (சு)

[நீ என்னும் பெயர் முதல் குறுகி னகரம் பெறுதல்]

179. நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகர ஒற்றா கும்மே. (எ)

[ஓகார ஈற்றுப் பெயர் ஒன்சாரியை பெறுதல்]

180. ஓகார இறுதிக் கொன்னே சாரியை. (அ)

[அகர ஆகார ஈற்று மரப்பெயர் ஏழாம் வேற்றுமைக்
கண் அத்துசசாரியை பெறுதல்]

181. அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்
கத்தொடுஞ் சிவணும் ஏழ னுருபே. (கூ)

[ஞகார நகார ஈற்றுசசொற்கள் இன்சாரியை பெறு
தல்]

182. ஞ-ந என் புள்ளிக் கின்னே சாரியை. (கO)

[வகர ஈற்றுச சுட்டுப்பெயா வற்றுசசாரியை பெறுதல்]

183. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யுங்
கெட்ட இறுதி இயற்றிரி பின்றே. (கக)

[ஏனை வகர வீற்றுசசொற்கள் இன்சாரியை பெறுதல்]

184. ஏனை வகரம் இன்னொடு சிவணும். (கஉ)

[மகர ஈறு அத்துசசாரியை பெறுதல்]

185. மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை. (கங)

[சில மகர ஈறு இன்சாரியை பெறுதல்]

186. இன்இடை வரூஉம் மொழியுமா ருளவே. (கச)

[நும் என்பது சாரியை பெறாமை]

187. நும்மென் இறுதி இயற்கை யாகும். (கரு)

[தாமும் நாமும் யாமும் புணருமாறு]

188 தாம்நாம் என்னும் மகர இறுதியும்
யாம்என் இறுதியும் அதனோ ரன்ன
ஆ எய் யாகும் யாம் என் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும். (கசு)

[எல்லாம் என்பது வற்றுச் சாரியையும் உம்மும் பெறுதல்] .

189. எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான. (கஎ)

[எல்லாம் என்பது உயர்திணையா யிருப்பின் நம் என்னும் சாரியை பெறுதல்]

190. உயர்திணை யாயின் நம்மிடை வருமே. (கஅ)

[எல்லாரும் எல்லீரும் என்னுஞ் சொற்கள் புணருமாறு]

191. எல்லாரும் என்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை யிறுதியும்
ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉ முன்னிலை மொழிக்கே. (ககூ)

[தானும் யானும் புணருமாறு]

192. தான்யான் என்னும் ஆயீ றிறுதியும்
மேல்முப் பெயரொடும் வேறுபா டிலவே. (உ0)

[அழனும் புழனும் அத்துச்சாரியையும் இன்சாரியை
யும் பெறுதல்]

193. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப வுணரு மோரே. (உக)

[எழென்னும் எண்ணுப்பெயர் அன்சாரியை பெறுதல்]

194. அன்னென் சாரியை ஏழன் இறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப. (உஉ)

[குற்றுகர ஈற்றுச்சொல் இன்சாரியை பெறுதல்]

195. குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை. (உங)

[நெடிற்றொடர்க் குற்றுகரம் இன் பெறாது இன
வொற்று மிகுதல்]

196. நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பால் மொழிகள் அல்வழி யான. (உச)

197. அவைதாம்
இயற்கைய ஆகுஞ் செயற்கைய என்ப. (உரு)

[குற்றுகர ஈற்று எண்ணுப் பெயர் அன்சாரியை
பெறுதல்]

198. எண்ணின் இறுதி அன்னொடு சிவணும். (உசு)

[ஒருபஃது முதலிய சொற்கள் புணருமாறு]

199. ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மான மில்லை
அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே. (உஎ)

[யாது அஃது முதலிய பெயர்கள் அன்சாரியை பெறுதல்]

200. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தங் கெடுதல் ஆவயி னான. (௨அ)

[திசைப்பெயர் புணருமாறு]

201. ஏழனுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி இயற்கையும் ஆகும்
ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே. (௨௯)

[இவ்வோத்தின் புறனடை]

202. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியுஞ்
சொல்லிய அல்ல ஏனைய எல்லாந்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே. (௩0)

## 7. உயிர்மயங்கியல்

[அகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் வன்கணத்துடன் புணருமாறு]

203. அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் க-ச-த-பத் தோன்றிற்
றத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே. (க)

[அகர ஈற்று வினையெச்சம், உவமவுருபு, சுட்டு, ஆங்க என்பவற்றின்முன் வல்லெழுத்து மிகுதல்]

204. வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனவென் எச்சமுஞ் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே. (உ)

[அகரச் சுட்டின்முன் மெல்லெழுத்தும் மிகுதல்]

205. சுட்டின் முன்னர் ஞ-ந-மத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும். (௩)

[சுட்டின்முன் ய-வ வரின் வகரந் தோன்றுதல்]

206. ய-வமுன் வரினே வகரம் ஒற்றும். (௪)

[சுட்டின்முன் உயிர்வரினும் வகரந்தோன்றுதல்]

207. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது. (௫)

[சுட்டு நீண்டு வருமிடம்]

208. நீட வருதல் செய்யுளுள் உரித்தே. (௬)

[சாவ என்னும் வினை எச்சத்தின் இறுதி வகரம் கெடுதல்]

209. சாவ என்னுஞ் செயவென் எச்சத்
திறுதி வகரங் கெடுதலும் உரித்தே. (எ)

[வல்லினம் மிகாத அகர ஈற்றுச் சொற்கள்]

210. அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்
செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பல்வற் றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட
அன்றி யனைத்தும் இயல்பென மொழிப. (அ)

[வாழிய என்பதன் இறுதி யகரம் கெடுதல்]

211. வாழிய என்னுஞ் சேயென் கிளவி
இறுதி யகரங் கெடுதலும் உரித்தே. (௯)

[அம்ம என்பது நீண்டு வருதல்]

212. உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார். ()

[பல என்பதன் இறுதி நீண்டு வருமிடம்]

213. பலவற் றிறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான. (கக)

[பல, சில என்பன தம்முன் தாம் புணருமாறு]

214. தொடர்அல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரவொற் றாதலு முரித்தே. (கஉ)

215. வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும். (கங)

[அகர ஈற்றுப் பெயர்முன் வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதல்]

216. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (கச)

[அகர ஈற்று மரப்பெயர்முன் மெல்லெழுத்து மிகுதல்]

217. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே. ()

[மக என்னும் பெயர் இன்சாரியை பெறுதல்]

218. மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை. (கரு)

[மக என்னும் பெயர் அத்துச் சாரியையும் பெறுதல்]

219. அத்தவண் வரினும் வரைநிலை யின்றே. (கஎ)

[பல என்னும் பெயர் வற்றுச்சாரியை பெறுதல்]

220. பலவற் றிறுதி உருபியல் நிலையும். (கஅ)

[ஆகார ஈற்றுப் பெயர்முன் அல்வழிக்கண் வல்லெழுத்து மிகுதல்]

221. ஆகார இறுதி அகர இயற்றே. (கசு)

[ஆகார ஈற்று வினையெச்சத்துமுன்னும் வல்லெழுத்து மிகுதல்]

222. செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர். (உ0)

[உம்மைத் தொகையில் ஆகார ஈற்றுப் பெயர்முன் வல்லெழுத்து மிகுதல்]

223. உம்மை யெஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகர மிகுமே. (உக)

[வல்லினம் மிகாத ஆகார ஈற்றுச் சொற்கள்]

224. ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவுந் 34
தன்றொழி லுரைக்கும் வினாவின் கிளவியோ
டன்றி யனைத்தும் இயல்பென மொழிப. (உஉ)

[ஆகார ஈறு வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணும் வல்லெழுத்து மிக்கு முடிதல்]

225. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (உங)

[அகரம் பெற்று முடியும் ஆகார ஈற்றுச் சொற்கள்]

226. குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி. (உச)

[இரா என்பது அகரம் பெறாமை]

227. இராவென் கிளவிக் ககர மில்லை. (உரு)

[நிலா என்பது அத்துச்சாரியை பெறுதல்]

228. நிலாவென் கிளவி அத்தொடு சிவணும். (உசு)

[யா, பிடா, தளா என்ற மரப்பெயர்க்குமுன் மெல்லெழுத்து மிகுதல்]

229. யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே. (உள)

[மேற்கூறிய மூன்று பெயர்முன்னும் வல்லெழுத்தும் மிகுதல்]

230. வல்லெழுத்து மிகினும் மான மில்லை. (உஅ)

[மா என்ற மரப்பெயர்முன் மெல்லெழுத்துமிகும், ஆவும் மாவும் னகரம் பெறுதல்]

231. மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும். (உகூ)

[ஆ னகரத்தோடு அகரமும் பெறுதல்]

232. ஆன்ஒற் றகரமொடு நிலையிட னுடைத்தே. (௩0)

[ஆ என்பதனோடு ஈகாரபகரம் புணருமாறு]

233. ஆன்முன் வரூஉம் ஈகார பகரந்
தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே. (௩க)

[குறிற்கீழ் ஆகாரம் குறுகி உகரம் பெறுதல்]

234. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே. (௩உ)

[இகர ஈற்றுப் பெயர்முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிகுதல்]

235. இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே. ()

[இனி, அணி என்னும் இடைச்சொல் முன்னும் இகர ஈற்று வினையெச்சத்தின் முன்னும் சுட்டு முன்னும் வல்லெழுத்துப் புணருமாறு]

236. இனிஅணி என்னுங் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டும் அன்ன. (௫௰௪)

[இன்றி என்னும் வினையெச்சம் செய்யுளில் முடியுமாறு]

237. இன்றி என்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகர மாதல்
தொன்றியன் மருங்கிற் செய்யுளுள் உரித்தே.()

[இகர ஈற்றுச் சுட்டுப் புணருமாறு]

238. சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே. (௫௰௬)

[தூணி முன் பதக்குப் புணருமாறு]

239. பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.(௫௰௭)

[உரி நாழியோடு புணருமாறு]

240. உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே
டகரம் ஒற்றும் ஆவயி னான. (௫௰௮)

[பனி இன்னசாரியை பெறு மென்பது]

241. பனியென வரூஉங் கால வேற்றுமைக்
கத்தும் இன்னுஞ் சாரியை யாகும். (௫௰௯)

[வளி இன்னசாரியை பெறு மென்பது]

242. வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப. (௬௰)

[உதி என்னும் மரப்பெயர் புணருமாறு]

243. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே. (சக)

[புளி என்னும் மரப்பெயர் இன்ன சாரியை பெறு மென்பது]

244. புளிமரக் கிளவிக் கம்மே சாரியை. (சஉ)

[புளி என்னும் சுவைப்பெயர் புணருமாறு]

245. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே. ()

246. வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்வழி யறிதல் வழக்கத் தான. (சச)

[இகர ஈற்று நாட்பெயர் இன்ன சாரியை பெறு மென்பது]

247. நாள்முற் றோன்றுந் தொழினிலைக் கிளவிக்
கானடை வருதல் ஐயம் இன்றே. (சரு)

[இகர ஈற்று மாதப் பெயர் இன்ன சாரியை பெறு மென்பது]

248. திங்கள் முன்வரின் இக்கே சாரியை. (சசா)

[ஈகார ஈற்றுப் பெயர் புணருமாறு]

249. ஈகார இறுதி ஆகார இயற்றே. (சஎ)

[நீ, மீ முதலிய சொற் புணருமாறு]

250. நீயென் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீயென மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும். (சஅ)

[மீ என்னும் சொல் அடையும் வேறுபாடு]

251. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளவென மொழிப. (௪௯)

[ஈகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண் புணருமாறு]

252. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (௫௦)

[நீ என்னும் பெயர் வேற்றுமைக்கண் புணருமாறு]

253. நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும். (௫௧)

[உகர ஈற்றுப்பெயர் புணருமாறு]

254. உகர இறுதி அகர இயற்றே. (௫௨)

[உகர ஈற்றுச் சுட்டுப் புணருமாறு]

255. சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும். (௫௩)

256. ஏனவை வரினே மேனிலை இயல்பே. (௫௪)

257. சுட்டுமுதல் இறுதி யியல்பா கும்மே. (௫௫)

[உகர ஈற்றுச் சுட்டுப்பெயர் செய்யுளின் முடியுமாறு]

258. அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலுஞ்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப. (௫௬)

[உகர ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண் புணருமாறு]

259. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (௫௭)

[எரு, செரு என்னுஞ் சொற்கள் புணருமாறு]

260. எருவுஞ் செருவும் அம்மொடு சிவணித்
திரிபிட னுடைய தெரியுங் காலை
அம்மின் மகரஞ் செருவயிற் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை. ()

[ழகர உகர ஈற்றுச்சொல் புணருமாறு]

261. ழகர உகர நீடிட னுடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான. (௫௯)

[ஒடு என்னும் மரப்பெயர் புணருமாறு]

262. ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே. (௬0)

[உகர ஈற்றுச் சுட்டுப்பெயர் புணருமாறு]

263. சுட்டு முதலிறுதி உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை. (௬௧)

[ஊகார ஈறு புணருமாறு]

264. ஊகார இறுதி ஆகார இயற்றே. (௬௨)

[ஊகார ஈற்று வினைச்சொற் புணருமாறு]

265. வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை அவ்வகை வரையார். (௬௩)

[ஊகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

266. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (௬௪)

[குறிற்கீழ் ஊகாரமும் தனி ஊகாரமும் புணருமாறு]

267. குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி. (௬௫)

[பூ என்னும் சொற் புணருமாறு]

268. பூவென் ஒருபெயர் ஆயியல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே. ( )

[ஊ என்னும் சொற் புணருமாறு]

269. ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும். (௬௭)

270. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத் தான. (௬௮)

[ஆடூஉ, மகடூஉ என்னும் சொற் புணருமாறு]

271. ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினும் மான மில்லை. (௬௯)

[எகர ஒகரங்களின் சிறப்பிலக்கணம்]

272. எகர ஒகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமுஞ் சிறப்பும் அல்வழி யான. (௭௦)

[இடைச்சொல் எகர ஒகரங்கள் புணருமாறு]

273. தேற்ற எகரமுஞ் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா. (௭௧)

[ஏகார ஈறு புணருமாறு]

274. ஏகார இறுதி ஊகார இயற்றே. (௭௨)

[இடைச்சொல் ஏகாரம் புணருமாறு]

275. மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும். (௭௩)

[ஏகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

276. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (எச)

277. ஏயென் இறுதிக் கெகரம் வருமே. (எரு)

[சே என்னும் மரப்பெயர் புணருமாறு]

278. சேவென் மரப்பெய ரொடுமர இயற்றே. (எசு)

[பெற்றத்தினை யுணர்த்தும் சே என்னும் பெயர் புணருமாறு]

279. பெற்ற மாயின் முற்றஇன் வேண்டும். (எஎ)

[ஐகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

280. ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.(எஅ)

[ஐகார ஈற்றுச் சுட்டுப்பெயர் புணருமாறு]

281. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும். (எகூ)

[விசை, ஞெமை, நமை என்னும் மரப்பெயர் புணருமாறு]

282. விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
அவைமுப் பெயருஞ் சேமர இயல. (அ0)

[பனை, அரை, ஆவிரை என்னும் மரப்பெயர் புணருமாறு]

283. பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய்யவண் ஒழிய என்மனார் புலவர். (அக)

[பனை, அட்டு என்னும் பெயரொடு புணருமாறு]

284. பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகும் ஐயென் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னான. (அஉ)

[பனை, கொடி என்னும் பெயரொடு புணருமாறு]

285. கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி. (அங)

[ஐகார ஈற்று மாதப் பெயரும் நாட்பெயரும் புணருமாறு]

286. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன. (அச)

[மழை என்னும் சொல் புணருமாறு]

287. மழையென் கிளவி வளியியல் நிலையும் (அரு)

[வேட்கை என்பது பெறும் செய்யுண் முடிபு]

288. செய்யுள் மருங்கின் வேட்கை யென்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும். (அசு)

[ஓகார ஈறு புணருமாறு]

289. ஓகார இறுதி ஏகார இயற்றே. (அஎ)

[இடைச்சொல் ஓப் புணருமாறு]

290. மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும். (அஅ)

291. ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற் றியற்றே. (அகூ)

[ஓகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

292. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஒகரம் வருதல் ஆவயி னான. (௬௦)

[கோ என்னுஞ் சொல் இல் என்பதனோடு புணருமாறு]

293. இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும். (௬௧)

[ஓகார ஈற்றுட் சிலவற்றுக்குச் சிறப்பு விதி]

294. உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும். (௬௨)

[ஔகார ஈறு புணருமாறு]

295. ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு வீற்றும் உகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே. (௬௩)

## 8. புள்ளிமயங்கியல்

[ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் வன்கணத்தோடு புணருமாறு]

296. ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருத லாவயி னான. (௧)

[ஞகார ஈற்றுத் தொழிற் பெயர் மென்கணத்தோடும், இடைக்கணத்து வகரத்தோடும் புணருமாறு]

297. ஞ-ந-ம-வ-இயையினும் உகரம் நிலையும். (௨)

[நகார ஈறு மூன்று கணங்களோடும் புணருமாறு]

298. நகர இறுதியும் அதனோ ரற்றே. (௫)

[நகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

299. வேற்றுமைக் குக்கெட அகரம் நிலையும். (௬)

[வெரிந் என்றதற்குச் சிறப்பு விதி]

300. வெரிந் என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை. ()

301. ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே. (௬)

[ணகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

302. ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே. (௭)

[ஆண், பெண் என்பன புணருமாறு]

303. ஆணும் பெண்ணும் அஃறிணை யியற்கை. (௮)

[ஆண் என்னும் மரப்பெயர் புணருமாறு]

304. ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே. (௯)

[விண் என்பது செய்யுளிற் புணருமாறு]

305. விண்ணென வரூஉங் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கிற் றொழில்வரு காலை. (௧௦)

[ணகார ஈற்றுத் தொழிற் பெயர் புணருமாறு]

306. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல. ()

[ணகார ஈற்றுக் கிளைப் பெயர் புணருமாறு]

307. கிளைப்பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே. ( )

[எண் என்ற உணவுப் பெயர் புணருமாறு]

308. வேற்றுமை யல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலும் உரித்தே. (௧௩)

[முரண் என்ற தொழிற் பெயர் புணருமாறு]

309. முரணென் தொழிற்பெயர் முதலியல் நிலையும். ( )

[மகர ஈற்றுப் பெயர் வேற்றுமைக்கண் புணருமாறு]

310. மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே. (௧௫)

311. அகர ஆகாரம் வரூஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே. (௧௬)

[சில மகர ஈற்றிற்குச் சிறப்பு விதி]

312. மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான. (௧௭)

[இல்லம் என்னும் மரப் பெயர் புணருமாறு]

313. இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே. (௧௮)

[அல்வழிக்கண் மகர ஈறு புணருமாறு]

314. அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும். (௧௯)

[அகம் என்பது கை என்பதனோடு புணருமாறு]

315. அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான. (௨௦)

[இலம் என்பது படு என்பதோடு புணருமாறு]

316. இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான. (உக)

[ஆயிரம் என்பது புணருமாறு]

317. அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒத்த எண்ணும் முன்வரு காலை. (உஉ)

318. அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே. ()

[ஆயிரம், அளவு நிறைப்பெயர்களோடு புணருமாறு]

319. அளவும் நிறையும் வேற்றுமை யியல. (உச)

[உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரும் வேற்றுமைக் கண் புணருமாறு]

320. படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயருந்
தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான. (உரு)

[முற்கூறிய பெயர்கள் அல்வழிக்கண் புணருமாறு]

321. அல்லது கிளப்பின் இயற்கை யாகும். (உசா)

[எல்லாம் என்பது புணருமாறு]

322. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லாம் எனும்பெயர் உருபியல் நிலையும்
வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது. (உஎ)

323. மெல்லெழுத்து மிகினும் மான மில்லை. (உஅ)

324. உயர்திணை யாயின் உருபியல் நிலையும். (உகூ)

[நும் என்னும் பெயர் புணருமாறு]

325. நும்என் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே. ()

[நும் என்னும் பெயர் அல்வழிக்கண் புணருமாறு]

326. அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இ இடை நிலைஇ யீறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை யாகும். (௱௧)

[மகர ஈற்றுத் தொழிற் பெயர் புணருமாறு]

327. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல. ()

[ஈம், கம், உரும் என்ற சொற்கள் புணருமாறு]

328. ஈமுங் கம்மும் உரும்என் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன. (௱௩)

[வேற்றுமையில் ஈமும் கம்மும் புணருமாறு]

329. வேற்றுமை யாயின் ஏனை யிரண்டுந்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை. (௱௪)

[மகர ஈறு வகரம் வரிற் குறுகு மென்பது]

330. வகார மிசையும் மகாரங் குறுகும். (௱௫)

[வேற்றுமைக்கண் மகர ஈற்று நாட்பெயர் புணருமாறு]

331. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே
ஒற்று மெய்கெடுதல் என்மனார் புலவர். (௱௬)

[னகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

332. னகார இறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே. (௩௭)

[சில னகார ஈற்றுச் சொற்கள் புணருமாறு]

333. மன்னுஞ் சின்னும் மானும் மீனும்
பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர். (௩௮)

[வயின் என்னும் இடைச்சொற் புணருமாறு]

334. சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்
அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப. (௩௯)

[குயின் என்னுஞ் சொற் புணருமாறு]

335. குயின்என் கிளவி இயற்கை யாகும். (௪0)

[எகின் என்னும் மரப்பெயர் புணருமாறு]

336. எகின்மர மாயின் ஆண்மர இயற்றே. (௪௧)

[மரம் அல்லாத எகின் புணருமாறு]

337. ஏனை யெகினே அகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும். (௪௨)

[னகார ஈற்றுக் கிளைப்பெயர் புணருமாறு]

338. கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல. (௪௩)

[மீன் என்னுஞ் சொற் புணருமாறு]

339. மீன்என் கிளவி வல்லெழுத் துறழ்வே. (௪௪)

[தேன் என்னுஞ் சொற் புணருமாறு]

340. தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை. (௪௫)

341. மெல்லெழுத்து மிகினும் மான மில்லை. (௪௬)

342. மெல்லெழுத் தியையின் இறுதியோ டுறழும். ()

[தேன் இறாலோடு புணருமாறு]

343. இறாஅல் தோற்றம் இயற்கை யாகும். (௪௮)

344. ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே. (௪௯)

[மின், பின், பன், கண் என்னுஞ் சொற்கள் புணருமாறு]

345. மின்னும் பின்னும் பன்னுங் கண்ணும்
அந்நாற் சொல்லுந் தொழிற்பெய ரியல. (௫௦)

[கன் என்னுஞ் சொல் வேற்றுமைக்கண் புணருமாறு]

346. வேற்றுமை யாயின் ஏனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி. (௫௧)

[னகார ஈற்று இயற்பெயர் தந்தை என்னும் பெயரோடு புணருமாறு]

347. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித் தன்கெடும் அவ்வியற் பெயரே. ()

348. ஆதனும் பூதனுங் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே. (ருிஉ)

349. சிறப்பொடு வருவழி யியற்கை யாகும். (ருிஈ)

[னகார ஈற்று இயற்பெயர் பிறமொழிகளோடு புணரு மாறு]

350. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியே
நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை
மக்கள் முறைதொகூஉம் மருங்கி னான. (ருிரு)

[தான், பேன், கோன் என்னும் இயற்பெயர் புணரு மாறு]

351. தானும் பேனுங் கோனும் என்னும்
ஆமுறை யியற்பெயர் திரிபிடன் இலவே. (ருிகூ)

[தான் யான், என்னும் விரவுப்பெயர் வேற்றுமைக் கண் புணருமாறு]

352. தான்யான் எனும்பெயர் உருபியல் நிலையும்.(ருிஎ)

[மேற்கூறிய பெயர் அல்வழிக்கண் புணருமாறு]

353. வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலுந்
தோற்ற மில்லை யென்மனார் புலவர். (ருிஅ)

[அழன் என்னும் பெயர் வேற்றுமைக்கண் புணரு மாறு]

354. அழன்என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே.()

[முன்றில் என்பதற்கு விதி]

355. முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை றகரம் ஒற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே. (௬0)

[பொன் என்பது செய்யுளிற் புணருமாறு]

356. பொன்னென் கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ்
செய்யுள் மருங்கில் தொடரிய லான. (௬௧)

[யகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண் புணருமாறு]

357. யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே. ()

[தாய் என்னும் சொல் வேற்றுமைக்கண் புணருமாறு]

358. தாயென் கிளவி இயற்கை யாகும். (௬௩)

[தாய் என்பது மகனது வினையைச் சொல்லுமிடத்துப் புணருமாறு]

359. மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே. (௬௪)

[சில யகார ஈற்று மொழிகள் புணருமாறு]

360. மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே. ()

[அவை அல்வழிக்கண் புணருமாறு]

361. அல்வழி யெல்லாம் இயல்பென மொழிப. (௬௬)

[ரகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

362. ரகார இறுதி யகார இயற்றே. (௬௭)

[சில ரகார ஈற்றுச் சொற்கள் புணருமாறு]

363. ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத் தோன்றும்.

[சார் என்பது காழ் என்பதனோடு புணருமாறு]

364. சார்என் கிளவி காழ்வயின் வலிக்கும். (௬௯)

[பீர் என்பது புணருமாறு]

365. பீர்என் கிளவி அம்மொடுஞ் சிவணும். (௭௦)

[லகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமைக்கண் புணருமாறு]

366. லகார இறுதி னகார இயற்றே. (௭௧)

[அவை மென்கணத்துடன் புணருமாறு]

367. மெல்லெழுத் தியையின் னகார மாகும். (௭௨)

[அவை அல்வழிக்கண் புணருமாறு]

368. அல்வழி யெல்லாம் உறழென மொழிப. (௭௩)

[லகர ஈறு தகரமுதன் மொழியோடு புணருமாறு]

369. தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே. (௭௪)

[நெட்டெழுத்தின் ஈற்று லகாரம் புணருமாறு]

370. நெடியதன் இறுதி இயல்புமா ருளவே. (௭௫)

[சில லகார ஈற்றுச் சொற்கள் புணருமாறு]

371. நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல. (௭௬)

[இல் என்னுஞ் சொற் புணருமாறு]

372. இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே. (௭௭)

[வல் என்னும் சொற் புணருமாறு]

373. வல்லென் கிளவி தொழிற்பெயர் இயற்றே. (௭௮)

374. நாயும் பலகையும் வரூஉங் காலை
ஆவயின் உகரங் கெடுதலும் உரித்தே
உகரங் கெடுவழி அகரம் நிலையும். (௭௯)

[பூல், வேல், ஆல் என்பன புணருமாறு]

375. பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொ
டாமுப் பெயர்க்கும் அம்இடை வருமே. (௮0)

[லகார ஈற்றுத் தொழிற்பெயர் புணருமாறு]

376. தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல.

[வெயில் என்னும் சொற் புணருமாறு]

377. வெயில்என் கிளவி மழையியல் நிலையும். (௮௨)

[வகார ஈற்றுச் சுட்டுப்பெயர் வேற்றுமைக்கண் புணருமாறு]

378. சுட்டுமுத லாகிய வகர இறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும். (௮௩)

[அவை அல்வழிக்கண் புணருமாறு]

379. வேற்றுமை யல்வழி ஆய்த மாகும். (௮௪)

[அவை மெல்லெழுத்தொடு புணருமாறு]

380. மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும். ()

[அவை ஏனை எழுத்துக்களோடு புணருமாறு]

381. ஏனவை புணரின் இயல்பென மொழிப. (அசு)

[ஏனை வகார ஈறு புணருமாறு]

382. ஏனை வகரம் தொழிற்பெயர் இயற்றே. (அஎ)

[ழகார ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு]

383. ழகார இறுதி ரகார இயற்றே. (அஅ)

[தாழ் என்னுஞ் சொற் புணருமாறு]

384. தாழ்என் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும். (அகூ)

[தமிழ் என்னுஞ் சொற் புணருமாறு]

385. தமிழ்என் கிளவியும் அதனோ ரற்றே. (கூ0)

[குமிழ் என்னும் மரப்பெயர் புணருமாறு]

386. குமிழ்என் கிளவி மரப்பெய ராயின்
பீரென் கிளவியோ டோரியற் றாகும். (கூக)

[பாழ் என்னுஞ் சொற் புணருமாறு]

387. பாழ்என் கிளவி மெல்லெழுத் துறழ்வே. (கூஉ)

[ஏழ் என்னும் எண்ணுப் பெயர் புணருமாறு]

388. ஏழ்என் கிளவி உருபியல் நிலையும். (கூ௩)

389. அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க. (கூச)

390. பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி. (கூரு)

391. ஆயிரம் வருவழி உகரங் கெடுமே. (கூசு)

392. நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே. (கூஎ)

393. ஐ அம் பல் என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும் (கூஅ)

394. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது. (கூகூ)

[கீழ் என்னுஞ் சொற் புணருமாறு]

395. கீழ் என் கிளவி உறழத் தோன்றும். (க00)

[ளகார ஈற்றுச்சொல் வேற்றுமைக்கண் புணருமாறு]

396. ளகார இறுதி ணகார இயற்றே. (க0க)

[அது மென்கணத்துடன் புணருமாறு]

397. மெல்லெழுத் தியையின் ணகாரம் ஆகும். (க0உ)

[அஃது அல்வழிக்கண் புணருமாறு]

398. அல்வழி யெல்லாம் உறழென மொழிப. (க0ங)

[ளகார ஈறு தகரமுதன் மொழியோடு புணருமாறு]

399. ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வரூஉங் காலை யான. (க0ச)

[நெட்டெழுத்தின் ஈற்று ளகாரம் புணருமாறு]

400. நெடியதன் இறுதி இயல்பா குநவும்
வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையினும்
போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே. ()

[ளகார ஈற்றுத் தொழிற்பெயர் புணருமாறு]

401. தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல.

[இருள் என்னும் சொற் புணருமாறு]

402. இருளென் கிளவி வெயிலியல் நிலையும். (க0எ)

[புள், வள் என்னுஞ் சொற்கள் புணருமாறு]

403. புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல. (கOஅ)

[மக்கள் என்னும் சொற் புணருமாறு]

404. மக்கள் என்னும் பெயர்ச்சொ லிறுதி
தக்கவழி யறிந்து வலித்தலும் உரித்தே. (கOகூ)

[இவ் வோத்தின் புறனடை]

405. உணரக் கூறிய புணரியன் மருங்கிற்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.

## ௯. குற்றியலுகரப் புணரியல்

[குற்றிய லுகரம் வருமிடம்]

406. ஈரெழுத் தொருமொழி
உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி
வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன். (க)

[ஈரொற்றுத் தொடர்மொழி என்ன தொடர் என்பது]

407. அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி
இடைத்தொடர் ஆகா. (உ)

[குற்றுகரம் முற்றுகரமாய் நிற்கும் இடம்]

408. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும். (௩)

[குற்றுகரம் அரைமாத்திரை பெறும் இடம்]

409. வல்லொற்றுத் தொடர்மொழி
வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே. (௪)

[குற்றியலிகரம் தோன்றுமாறு]

410. யகரம் வருவழி இகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது. (௫)

[நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் புணருமாறு]

411. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி. (௬)

412. ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே. (௭)

[இடைத்தொடர் ஆய்தத்தொடர்க் குற்றிய லுகரம் புணருமாறு]

413. இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடையா யியல என்மனார் புலவர். (௮)

[வன்றொடர் மென்றொடர்க் குற்றியலுகரம் புணருமாறு]

414. வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே [லாம்
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும். (௯)

[வன்றொடர் மென்றொடர்க் குற்றுகர ஈற்று மரப்
பெயர் புணருமாறு]

415. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை. (௧0)

[மென்றொடர்க் குற்றுகர ஈற்று மரப்பெயர் சில
புணருமாறு]

416. மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே.()

[நெடிற்றொடர் வன்றொடர்க் குற்றுகரம் புணருமாறு]

417. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம் இடை வரற்கும் உரியவை உளவே
அம்மர பொழுகும் மொழிவயி னான. (௧௨)

[சில மென்றொடர்க் குற்றுகரம் புணருமாறு]

418. ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியும் உளவென மொழிப.(௧௩)

[குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் புணருமாறு]

419. எண்ணுப்பெயர்க் கிளவி உருபியல் நிலையும். ()

[வண்டு, பெண்டு என்பன புணருமாறு]

420. வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும். (௧௫)

421. பெண்டென் கிளவிக் கன்னும் வரையார். (௧௬)

[குற்றுகர வினைப்பெயரும் சுட்டுப்பெயரும் புணரு
மாறு]

422. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும். (௧௭)

[சுட்டுப் பெயர் அல்வழிக்கண் புணருமாறு]

423. முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான. (௧௮)

424. எனைமுன் வரினே தான்நிலை யின்றே. (கக)

[குற்றுகரம் அல்வழிக்கண் புணருமாறு]

425. அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும். (உ௦)

[வன்றொடர்க் குற்றியலுகரம் புணருமாறு]

426. வல்லொற்றுத் தொடர்மொழி
வல்லெழுத்து மிகுமே. (உக)

[இடப்பொருள் உணர்த்தும் குற்றுகர ஈற்று இடைச்
சொற் புணருமாறு]

427. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை. (உஉ)

[யாங்கு முதலிய வினாப்பெயர் புணருமாறு]

428. யாவினா மொழியே இயல்பு மாகும். (உங)

[சுட்டுப் பெயரும் வினாப் பெயரும் புணருமாறு]

429. அந்நான் மொழியும் தந்நிலை திரியா. (உச)

[உண்டு என்னும் மொழி புணருமாறு]

430. உண்டென் கிளவி உண்மை செப்பின்
முந்தை யிறுதி மெய்யொடுங் கெடுதலும்
மேனிலை ஒற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து வரூஉங் காலை யான. (உரு)

[குற்றுகர ஈற்றுத் திசைப் பெயர் அல்வழிக்கண்
புணருமாறு]

431. இருதிசை புணரின் ஏயிடை வருமே. (உசு)

[கோணத் திசைப் பெயர்கள், பெருந்திசைப் பெயர்
ளோடு புணருமாறு]

432. திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணருங் காலை யான. (உஎ)

[பத்தென்னும் எண்ணுப்பெயரோடு மற்றைய எண்
ணுப்பெயர் புணருமாறு]

433. ஒன்றுமுத லாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரிற்
குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்ற இன்வரூஉம் இரண்டலங் கடையே. (உஅ)

[பத்து என்னும் எண்ணுப்பெயரோடு இரண்டு என்
னும் எண்ணுப்பெயர் புணருமாறு]

434. பத்தன் ஒற்றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டு வருகாலை. (உசு)

[அதனோடு ஆயிரம் என்பது புணருமாறு]

435. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது. (௩௦)

[அதனோடு நிறைப்பெயரும் அளவுப்பெயரும் புணரு
மாறு]

436. நிறையும் அளவும் வரூஉங் காலையும்
குறையா தாகும் இன்னென் சாரியை. (௩க)

[ஒன்று முதலிய எண்ணுப் பெயரோடு பத்து என்பது
புணருமாறு]

437. ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்தன் ஒற்றுக்கெட வாய்தம்

வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கை குற்றிய லுகரம்
ஆறன் இறுதி அல்வழி யான. (௩௨)

[ஒன்று முதலிய நிலைமொழிகள் விகாரப்படுமாறு]

438. முதலீர் எண்ணினொற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயி னான. (௩௩)

439. இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயி னான. (௩௪)

440. மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும். (௩௫)

441. மூன்றன் ஒற்றே பகாரம ஆகும். (௩௬)

442. நான்கன் ஒற்றே றகாரம் ஆகும். (௩௭)

443. ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும். (௩௮)

444. எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும். (௩௯)

445. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும். (௪0)

[ஒன்று முதலிய எண்ணுப்பெயரோடு அளவுப்பெய
ரும் நிறைப்பெயரும் புணருமாறு]

446. அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியும்
கிளந்த இயல தோன்றுங் காலை. (௪௧)

[மூன்று என்பது புணருமாறு]

447. மூன்றன் ஒற்றே வந்த தொக்கும். (௪௨)

[ஐந்து என்பது புணருமாறு]

448. ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும். (சங)

449. க-ச-த-ப முதன்மொழி வரூஉங் காலை. (சச)

[எட்டு என்பது சில அளவுப்பெயரோடு புணருமாறு]

450. ந-ம-வ என்னும் மூன்றொடு சிவணி
அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே. (சரு)

[ஐந்தும் மூன்றும் சில அளவுப்பெயரோடு புணருமாறு]

451. ஐந்தும் மூன்றும் ந-ம வரு காலை
வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே. (சசா)

[மூன்று என்பது வகரமுதன் மொழியோடு புணருமாறு]

452. மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத் துருவா கும்மே. (சஎ)

[நான்கு என்பது புணருமாறு]

453. நான்கன் ஒற்றே லகாரம் ஆகும். (சஅ)

[ஐந்து என்பது புணருமாறு]

454. ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே. (சகூ)

[ஒரு, இரு என்பன உயிர் முதன் மொழியோடு புணருமாறு]

455. முதலீர் எண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான. (ருய)

[மூன்று, நான்கு, ஐந்து என்பன புணருமாறு]

456. மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரத் தியற்கை யாகும். (ருக)

457. மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான. (ருஉ)

[ஆறு என்பது புணருமாறு]

458. ஆறென் கிளவி முதனீ டும்மே. (ருங)

[ஒன்பது என்பது அளவுப்பெயர் முதலியவற்றோடு புணருமாறு]

459. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டும் சாரியை மொழியே. ()

[ஒன்று முதல் ஒன்பான்களுடன் நூறு என்பது புணருமாறு]

460. நூறுமுன் வரினும் கூறிய இயல்பே. (ருரு)

[மூன்று என்பது நூற்றோடு புணருமாறு]

461. மூன்றன் ஒற்றே நகார மாகும். (ருசா)

[நான்கும் ஐந்தும் முன்வரும் நூற்றோடு புணருமாறு]

462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா. (ருஎ)

[ஒன்பது என்பது நூற்றோடு புணருமாறு]

463. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊவா வாகும் இயற்கைத் தென்ப
வாயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகர மொற்றும். (ருஅ)

[ஒரு, இரு என்னும் எண்ணுடன் ஆயிரம் புணருமாறு]

464. ஆயிரக் கிளவி வரூஉங் காலை
முதலீர் எண்ணின் உகரங் கெடுமே. (௫௯)

465. முதனிலை நீடினும் மான மில்லை. (௬௦)

[மூன்று என்பது புணருமாறு]

466. மூன்றன் ஒற்றே வகார மாகும். (௬௧)

[நான்கு என்னும் எண் புணருமாறு]

467. நான்கன் ஒற்றே லகார மாகும். (௬௨)

[ஐந்து என்னும் எண் புணருமாறு]

468. ஐந்தன் ஒற்றே யகார மாகும். (௬௩)

[ஆறு என்னும் எண் புணருமாறு]

469. ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும். (௬௪)

[ஒன்பது என்பது புணருமாறு.]

470. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டும் சாரியை மரபே. (௬௫)

[ஒன்றுமுதல் ஒன்பான்களுடன் நூறு என்னும் அடை யடுத்த ஆயிரம் புணருமாறு]

471. நூறா யிரமுன் வரூஉங் காலை
நூறன் இயற்கை முதனிலைக் கிளவி. (௬௬)

[நூறு என்பதனுடன் ஒன்று முதல் ஒன்பான்கள் புணருமாறு]

472. நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்
கீறுசினை யொழிய இனவொற்று மிகுமே. (௬௭)

[நூறு என்பதுடன் ஒன்று முதல் ஒன்பான்கள் அடை அடுத்தவழிப் புணருமாறு]

473. அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும். (சுஅ)

[நூறு என்பதனோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் புணருமாறு]

474. அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர். (சுகூ)

[அடையடுத் தபத்தனோடு ஒன்றுமுதல் ஒன்பான்கள் புணருமாறு]

475. ஒன்று முதலாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும். (எ0)

[ஒருபது முதலியவற்றோடு ஆயிரம் புணருமாறு]

476. ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகுத லில்லை. (எக)

[அவற்றோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் புணருமாறு]

477. அளவும் நிறையும் ஆயியல் திரியா. (எஉ)

[ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட் பெயர் புணருமாறு]

478. முதனிலை எண்ணின்முன் வல்லெழுத் துவரினும்
ஞ-ந-மத் தோன்றினும் ய-வவந் தியையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர். (எஙு)

479. அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஒவா குமே
ரகரத் துகரம் துவரக் கெடுமே. (எச)

[இரண்டு முதல் ஒன்பான்களின் முன்னர் மா என்னும் சொல் புணருமாறு]

480. இரண்டுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்
வழங்கியன் மாஎன் கிளவி தோன்றின்
மகர அளவொடு நிகரலும் உரித்தே. (எரு)

[லகார னகார வீற்றுச் செய்யுள் முடிவு]

481. ல-னஎன வரூஉம் புள்ளி யிறுதிமுன்
உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும் .
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான. (எசா)

[இவ் வதிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்கள் வருமாறு]

482. உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த என்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலும் தொழிறொகு மொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முற் றம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றா. (எஎ)

[இவ்வதிகாரத்திற்குப் புறனடை]

483. கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியன் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர். (௭அ)

## எழுத்ததிகாரம் முற்றிற்று

---

[எழுத்ததிகாரத்தில் அடங்கும் இயல்களின் பெயரும் அவற்றின் முறையும்]

### வெண்பா

நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு — பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கம்
தெரிவரிய குற்றுகரம் செப்பு

[இவ்வதிகாரத்திற் கண்ட இயல்களின் தொகையும் நூற்பாக்களின் தொகையும்]

### வெண்பா

எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய வொன்பதோத் துள்ளும் — வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கண்
மேனூற்று வைத்தார் விரித்து.

# தொல்காப்பியம்
# சொல்லதிகாரம்

# சொல்லதிகாரம்

## 1. கிளவியாக்கம்

[சொல் இருதிணைப்படும் என்பது]

484. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் *இசைக்குமன் சொல்லே. (க)

[உயர்திணையின் பாகுபாடு]

485. ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே (உ)

[அஃறிணையின் பாகுபாடு]

486. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே. (ங)

[பால் தெரிக்கும் விகுதிபெறாத சொற்கள்]

487. பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே 765
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும். (ச)

* இசைக்குமன — சேனாவரையர்.

[ஆண்பால் உணர்த்தும் விகுதி]

488. னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல். (ரு)

[பெண்பால் உணர்த்தும் விகுதி]

489. ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல். (சா)

[பலர்பால் உணர்த்தும் விகுதி]

490. ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே. (எ)

[ஒன்றன்பால் உணர்த்தும் விகுதி]

491. ஒன்றறி கிளவி த-ற-ட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும். (அ)

[பலவின்பால் உணர்த்தும் விகுதி]

492. அ-ஆ வ-என வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவறி சொல்லே. (கூ)

[பால் உணர்த்தும் விகுதி வினைச்சொல்லில் தோன்றும் என்பது]

493. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே (க0)

[ஒருபால் உணர்த்தும் வினைச்சொல் மற்றொருபால் உணர்த்தும் பெயர்ச் சொல்லுடன் மயங்காது என்பது]

494. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே. (கக)

495. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற் காகிடன் இன்றே. (க௨)

[வினாவும் செப்பும் வழுவுதல் ஆகா என்பது]

496. செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல். (க௩)

[வினா செப்பாகும் இடம்]

497. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே. (க௪)

498. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான. (க௫)

[செப்பிற்கும் வினாவிற்கும் மரபு]

499 செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்
கப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே.()

[மரபு வழுவமைதி]

500 தகுதியும் வழக்குந் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே. (க௭)

[செய்யுள் வழக்கு]

501. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே. (க௮)

[இயற்கைப் பொருளை இவ்வாறு சொல்லல் வேண்டும் என்பது]

502 இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல். (க௯)

[செயற்கைப் பொருளைச் சொல்லுமாறு]

503. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல். (௨0)

[ஆக்கம் காரணம் பெற்று வரும் என்பது]

504. ஆக்கந் தானே காரண முதற்றே. (௨௧)

[வழக்கில் ஆக்கம் காரணமின்றி வரும்]

505. ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கின் உள்ளே. (உஉ)

[பால் துணியாத ஐயப்பொருளைக் கூறுமாறு]

506 பான்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல். (உங)

507. உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை. (உச)

[ஐயமறுத்துத் துணிந்த பொருளைக் கூறுமாறு]

508. தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான. (உரு)

[முன் வண்ணங் கூறிப் பின் சினை கூறவேண்டும் என்பது]

509. அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல். (உசா)

[பால்வழுவும் திணைவழுவும்]

510. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல. (உஎ)

[இடஞ்சுட்டும் முதனிலை இவை என்பது]

511. செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப. (உஅ)

512. அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயி ரிடத்த (உகூ)

513. ஏனை யிரண்டும் ஏனை யிடத்த. (௩௰)

[அறியாப் பொருள்மேல் சொல் நிகழ்த்துமாறு]

514. யாதுஎவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.()

[யாது என்பது அறிந்த பொருள்வயினும் வரும் என்பது.]

515. அவற்றுள்
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி * ஆதலும் உரித்தே. (௩உ)

[இத்துணை என்று அறியப்பட்ட பொருள்களுக்கு முற்றும்மை கொடுக்கவேண்டும் என்பது.]

516. இனைத்தென அறிந்த சினைமுதற் † கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும். ()

[நிலையாப் பொருள்களுக்கும் முற்றும்மை வேண்டும் என்பது]

517. மன்னுப் பொருளும் அன்ன இயற்றே. (௩௪)

[அல்லதில் என்னுஞ் செப்பு நிகழ்த்துமாறு]

518. எப்பொருள் ஆயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல் ()

519. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல். (௩௬)

* ஆகலும் — வேறு பாடம்.
† கிளவி — இளம்பூரணர்.

[பொருட்பெயர் சுட்டுப்பெயராய் நிற்றல்]

520. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅது தொன்று கும்மே. (௩௭)

[இயற்பெயர்க்குப் பின் சுட்டுப்பெயர் வரல்வேண்டும் என்பது]

521. இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றிற்
சுட்டுப் பெயர்க்கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர். (௩௮)

[செய்யுளில் சுட்டுப்பெயர் முன்வரலாம் என்பது]

522. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே. (௩௯)

[காரணக் கிளவியும் சுட்டுப்பெயர்போல் பின்வரும் என்பது]

523. சுட்டு முதலாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெயர் இயற்கையிற் செறியத் தோன்றும்

[சிறப்புப் பெயர்க்குப் பின்னர் இயற்பெயர் வரும் என்பது]

524. சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார். (௪௧)

[ஒருபொருள் குறித்த பல்பெயர் வெவ்வேறு வினை பெறு என்பது]

525. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே ()

[திணை வழுவமைதி]

526. தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார். ()

[ஒன்று என்னும் எண்ணல்லாத மற்றை எண்ணுப் பெயர்களிலிருந்து ஆண்பால் பெண்பாற் சொற்கள் பிறவா என்பது]

527. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது (௪௪)

[வியங்கோளாயின் திணை விரயும் என்பது]

528. வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்

[பல வினைகளைக் குறிக்குமிடத்துப் பொதுவினையாற் கூறவேண்டும் என்பது]

529. வேறு வினைப் பொதுச்சொ லொரு*வினை கிளவார்

530. எண்ணுங் காலும் அதுவதன் மரபே. (௪௭)

[இரட்டைக் கிளவி பிரிந்து இசையாது என்பது]

531. இரட்டைக் கிளவி †இரட்டிற்பிரிந் திசையா. ()

[தலைமையும் பன்மையும் பற்றிய பெயர்வழக்கு]

532. ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

[அடிப்பட்ட வழக்கால் பெயரும் தொழிலும் பால் உணர்த்துதல்]

533. பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன. (௫௦)

[திணை விரவிவரும் பெயர்கள் செய்யுளில் அஃறிணை முடிபுபெறும் என்பது]

534. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே. (௫௧)

* வினைக்கிளவார் — இளம்பூரணர்.

† இரட்டிப் பிரிந்து — இளம்பூரணர்.

[பலபொருள் ஒரு சொல்லின் பாகுபாடு]

535. வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொலென்
றாயிரு வகைய பலபொருள் ஒருசொல். (௫௨)

[வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல் வினை முதலியவற்றால் பொருள் தெரியும் என்பது]

536. அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே. (௫௩)

537. ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும். ()

[வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல்லைக் கிளந்து கூறல்வேண்டும் என்பது]

538. வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும். (௫௫)

[குறித்த பொருளைத் தெரித்துக் கூறல் வேண்டும் என்பது]

539. குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி. ()

[உயர்திணைக் குறிப்புப்பெயர் அஃறிணை முடிபேற்கும் என்பது]

540. குடிமை யாண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செற்றச்சொல் விறற்சொலென்

537, 538 இவ்விரண்டையும் ஒன்றாகக்கொள்வர் சேனாவரையர்.

ருவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும். (௫௭)

[அஃறிணை முடிபு பெறும் உயர்திணைச் சொற்கள்]

541. காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன. (௫௮)

[காலம் முதலிய சொற்கள் ஈறுதிரியாது உயர்திணை முடிபு பெறும் என்பது]

542 நின்றாங் கிசைத்தல் இவணியல் பின்றே. (௫௯)

[ஈறுதிரியின் உயர்திணை முடிபுபெறும் என்பது]

543. இசைத்தலும் உரிய வேறிடத் தான. (௬௦)

[அருத்தாபத்திப் பொருள்]

544. எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே. ()

[பன்மைச் சினைப்பெயர் முதல்வினையான் முடியும் வழிப் பன்மைவினை பெறவேண்டா என்பது]

545. கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே (௬௨)

# 2. வேற்றுமையியல்

[வேற்றுமை இத்தனை என்பது]

546. வேற்றுமை தாமே ஏழென மொழிப. (௧)

547. விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே. (௨)

[வேற்றுமையின் பெயரும் முறையும்]

548. அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி என்னும் மீற்ற. (௩)

[எழுவாய் வேற்றுமையின் வடிவு]

549. அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

[எழுவாய் ஏற்கும் பயனிலை அறுவகை என்பது]

550. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே. (௫)

[தொகைப் பெயரும் பயனிலைகொள்ளும் என்பது]

551. பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வும் உரிய அப்பா லான. (௬)

[எழுவாய் வெளிப்படத் தோன்றி நிற்றல் வேண்டும் என்பது]

552. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப (௭)

[உருபு நிற்கும் இடம்]

553. கூறிய முறையின் உருபுநிலை திரியா
ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப. (அ)

[பெயர்ச்சொல்லின் இலக்கணம்]

554. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே. (கூ)

[இரண்டாம் வேற்றுமையின் பொருள்]

555. இரண்டா குவதே
ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலிற் றோன்றும் அதுவே. (க0)

556. காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பிற் புகழிற் * பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின்
தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின்
எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார். (கக)

555, 556 இவ்விரண்டையும் ஒன்றாக்கொள்வர் இளம்பூரணம.
* பழிப்பின் — இளம்பூரணர்.

[மூன்றாம் வேற்றுமையின் பொருள்]

557. மூன்றாகுவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே. (கஉ)

558. அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனொ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனொ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனொ டியைந்த வொப்பல் ஒப்புரை
இன்னா னேது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார். (கங)

[நான்காம் வேற்றுமையின் பொருள்]

559. நான்காகுவதே
குவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொருள் ஆயினுங் கொள்ளும் அதுவே. (கச)

560. அதற்குவினை உடைமையின்
அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின்
அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின்
அதற்பொருட் *டாதலின்
நட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்
றப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்.

557, 558 இவ்விரண்டையும் ஒன்றாக்கொள்வர் இளம்பூரணர்.
559, 560 இவ்விரண்டையும் ஒன்றாக்கொள்வர் இளம்பூரணர்.
* டாகலின் — இளம்பூரணர்.

[ஐந்தாம் வேற்றுமையின் பொருள்]

561. ஐந்தாகுவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே. (கசு)

562. வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்று
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம என்று
இன்மை உடைமை நாற்றந் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவும் அதன்பால என்மனார். (கஎ)

[ஆறாம் வேற்றுமையின் பொருள்]

563 ஆறாகுவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே. (கஅ)

564. இயற்கையின் உடைமையின்
முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின்
வினையின் என்று
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்று

---

561, 562 இவ்விரண்டையும் ஒன்றாக்கொள்வர் இளம்பூரணர்.
563, 564 இவ்விரண்டையும் ஒன்றாக்கொள்வர் இளம்பூரணர்.

தெரிந்துமொழிச் செய்தியின்
நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கில் தோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர். (௧௯)

[ஏழாம் வேற்றுமையின் பொருள்]

565. ஏழாகுவதே
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே. ()

[ஏழாம் வேற்றுமையின் உருபுகள்]

566 கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்*சார் அயல்புடை †தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார். (௨௧)

[வேற்றுமைத் தொகையை விரிக்குமாறு]

567. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலும் தொகைவயிற் *பிரிந்து
பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப. (௨௨)

---

565, 566 இவ்விரண்டையும் ஒன்றாக்கொள்வர் இளம்பூரணர்.
* சார்பயல் — இளம்பூரணர்.
† தேம்வகை — இளம்பூரணர்.

567 இச்சூத்திரத்தை இரண்டாக்கி,
'வேற்றுமை — பிரிந்தே' என்பதனை ஒன்றாகவும்,
'பல்லாறாக — என்ப' என்பதனை மற்றொன்றாகவும்
பிரித்து உரை கூறுவர் இளம்பூரணர்.
* பிரித்தே — இளம்பூரணம்.

# 3. வேற்றுமை மயங்கியல்

[இரண்டாம் வேற்றுமை ஏழாம் வேற்றுமையொடு மயங்குதல்]

568. கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை.

569. சினைநிலைக் கிளவிக் கையும் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர். (உ)

570. கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே. (௩)

[முதற்சொல்லொடு தொடர்ந்த சினைச்சொல் வேற்றுமை ஏற்குமாறு]

571. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே. (௪)

572. முதல்முன் ஐவரிற் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப. (௫)

[முதலும் சினையும் சொல்லுவான் குறிப்பின என்பது]

573. முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே. (௬)

[பிண்டப்பெயர், முதற்பெயர் சினைப்பெயர்களின் இலக்கணம் பெறும் என்பது]

574. பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய பண்பே. (௭)

[ஒரு வினைக்கண்வரும் ஒடு உருபு உயர்ந்த பொருளைப் பற்றிவரும் என்பது]

575. ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே. (௮)

[ஏதுப்பொருள் மூன்றாம் வேற்றுமைக்கண்ணும் ஐந்தாம் வேற்றுமைக்கண்ணும் வரும் என்பது.]

576. மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர். (௯)

[நோக்கல் நோக்கத்திற்கு ஏதுவும் செயப்படு பொருளும் ஒத்த உரிமையவாம் என்பது]

577. இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்
விரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும். (௧௦)

[ஆறாம்வேற்றுமைப் பொருண்மேல்வரும் உயர்திணைத் தொகைக்கண் நான்கனுருபு விரியும் என்பது]

578. அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே. (௧௧)

[தடுமாறு தொழிற்பெயர்க்கண் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கும் என்பது]

579. தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான. (௧௨)

580. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு மோரே. (௧௩)

[ஓம்படைப்பொருட்கண் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கும் என்பது]

581. ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை. (௧௪)

[வாழ்ச்சிக் கிழமைக்கண் ஆறாவதும் ஏழாவதும் மயங்கும் என்பது]

582. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழு மாகும் உறைநிலத் தான. (௧௫)

[கொடைப்பொருட்கண் நான்காவதும் ஆறுவதும் மயங்கும் என்பது]

583. குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குரித்து மாகும். (கரு)

[அச்சப் பொருட்கண் ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்கும் என்பது]

584. அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயி னான. (கள)

[வேற்றுமை மயக்கமும் தொன்றுதொட்டு வரும் வழக்கிற் பிழையாது என்பது]

585. அன்ன பிறவும் தொன்னெறி பிழையா
துருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே. (கஅ)

[பல உருபு தொடர்ந்து அடுக்கி வந்த வேற்றுமைச் சொற்கள் ஒரு முடிபு பெறும் என்பது]

586. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே. (கக)

[வேற்றுமை உருபு இடையிலன்றி இறுதியிலும் விரிந்து நிற்கும் என்பது]

587. இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார். ()

[ஓர் உருபு மற்றோர் உருபினை ஏற்றலும் உருபு தொகுதலும் வழக்கின்படி என்பது]

588. பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப. (உக)

[இரண்டாவதிலும் எழாவதிலும் அல்லது இறுதிக்கண்
உருபு தொகாது என்பது]

589. ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான. (௨௨)

[எந்த உருபுகள் வரினும் பொருளின்படி வேற்றுமை
கொள்ளவேண்டும் என்பது]

590. யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். ()

[எதிர்மறைக்கண்ணும் வேற்றுமைப் பொருள் திரிதல்
இல்லை என்பது]

591. எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே. ()

[சில உருபுகள் செய்யுளில் திரிந்து நிற்கும் என்பது]

592 கு ஐ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே. (௨௫)

592. அஎனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப. (௨௬)

[நான்கனுருபு ஏனைய உருபுகளின் பொருள்களோடு
மயங்கும் என்பது]

593. இதனை திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாரே. (௨௭)

[நான்கனுருபு ஒழிந்த உருபுகளும் வழக்கு முறைப்படி
மயங்கும் என்பது]

594. ஏனை யுருபும் அன்ன மரபின
மானம் இலவே சொன்முறை யான. (௨௮)

[வினைக்குக் காரணம் எட்டு என்பது]

595. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற் கிதுபய னாக என்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முதல் நிலையே. (௨௯)

596. அவைதாம்
வழங்கியல் மருங்கிற் குன்றுவ குன்றும். (௩௦)

[ஆகுபெயரின் இலக்கணம்]

597. முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி. (௩௧)

[ஆகுபெயர் இரண்டியலபுடைய என்பது]

598. அவைதாம்
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை. (௩௨)

[ஆகுபெயரும் வேற்றுமை ஏற்கும் என்பது]

599. வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும். ()

[அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகும் என்பது]

600. அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளஎன மொழிப உணர்ந்திசி னோரே. (௩௪)

[வேறு ஆகுபெயர் தோன்றினும் கொள்ளப்படும் என்பது]

601. கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே. ()

## 4. விளி மரபு

[விளி இன்னது என்பது]

602. விளிஎனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப. (௧)

[விளிகொள்ளும் பெயர்களைக் கூறுவேன் என்பது]

603. அவ்வே
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப. (௨)

[விளியேற்கும் உயர்திணைப்பெயர்கள் இவை என்பது]

604. அவைதாம்
இ உ ஐ ஓ என்னும் இறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கில்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே. ()

[இகர ஈகார ஈறுகள் விளியேற்குமாறு]

605. அவற்றுள்
இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும். (௪)

[ஓவும் உவ்வும் விளியேற்குமாறு]

606. ஓவும் உவ்வும் ஏ யொடு சிவணும். (௫)

[மேற்கூறிய உகரம் இன்னது என்பது]

607. உகரந் தானே குற்றிய லுகரம். (ரு)

[மேற்கூறிய நான்கு ஈறும் அல்லா உயிர் ஈறுகள் உயர்திணைக்கண் விளி கொள்ளா என்பது]

608. ஏனை உயிரே உயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர். (எ)

[இகர ஈற்று அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு]

609. அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய ஆகுஞ் செயற்கைய என்ப. (அ)

[ஐயீறு முறைப்பெயர்க்கண் ஆவாகவும் வருமென்பது]

610. முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவும் உளவே. (கூ)

[அண்மைவிளி இயல்பாம் என்பது]

611. அண்மைச் சொல்லே இயற்கை யாகும். (க0)

[புள்ளியீற்றுள் விளியேற்கும் உயர்திணைப் பெயர் இவை என்பது]

612. ணரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி இறுதி விளிகொள் பெயரே. (கக)

[புள்ளியீற்றுள் விளி ஏலாதன]

613. ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா. (கஉ)

[அன் இறுதி ஆ ஆகும் என்பது]

614. அன்னென் இறுதி ஆவா கும்மே. (கங)

[னகர ஈறு அண்மைவிளிக்கண் அகரம் ஆகும் என்பது]

615. அண்மைச் சொல்லிற் ககர மாகும். (கச)

[ஆன் இறுதி இயல்பாகும் என்பது]

616. ஆனென் இறுதி இயற்கை யாகும். (கரு)

[ஆன் ஈற்று வினையா லணையும் பெயர் ஆய் ஆகும் என்பது]

617. தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான. (௧௬)

[ஆன் ஈற்றுப் பண்புப்பெயரும் ஆய் ஆகும் என்பது]

618. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. (௧௭)

[ஆன் ஈற்று அளபெடைப் பெயர் விளி ஏற்குமாறு]

619. அளபெடைப் பெயரே அளபெடை இயல. (௧௮)

[னகார ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு]

620. முறைப் பெயர்க் கிளவி ஏயொடு வருமே. (௧௯)

[னகார ஈற்றுள் விளி ஏலாத பெயர்கள் இவை என்பது]

621. தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இலவே. (௨௰)

[ரகார ஈற்றுப்பெயர் விளி ஏற்குமாறு]

622. ஆரும் அருவும் ஈரொடு சிவணும். (௨௧)

[ரகார ஈற்று வினையாலணையும் பெயர் விளி ஏற்குமாறு]

623. தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே. (௨௨)

[ரகார ஈற்றுப் பண்புகொள் பெயர் விளி ஏற்குமாறு]

624. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. (௨௩)

[ரகார ஈற்று அளபெடைப் பெயர் விளி ஏற்குமாறு]

625. அளபெடைப் பெயரே அளபெடை இயல. (௨௪)

[ரகார ஈற்றுள் விளி ஏலாத பெயர்கள் இவை என்பது]

626. சுட்டுமுதற் பெயரோ முற்கிளந் தன்ன. (உ௫)

627. நம்மின் திரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை இரண்டும் அவற்றியல் பியலும். (உ௬)

[லகார ளகார ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்குமாறு]

628. எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும். (உ௭)

629. அயல்நெடி தாயின் இயற்கை யாகும். (உ௮)

[ளகார ஈற்று வினைப்பெயரும் பண்புகொள் பெயரும் ஆய் ஆகும் என்பது]

630. வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆள்என் இறுதி
ஆய்ஆ குமே விளிவயி னான. (உ௯)

[ளகார ஈற்று முறைப்பெயர் ஏகாரம் பெறும் என்பது]

631. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல. ()

[ளகார ஈற்றுள் விளி ஏலாத பெயர்கள் இவை என்பது]

632. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர். (௩௧)

[லகார ளகார ஈற்று அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு]

633. அளபெடைப் பெயரே அளபெடை இயல. ()

[விரவுப்பெயர் விளியேற்குமாறு]

634. கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை. (௩௩)

[அஃறிணைப்பெயர் விளியேற்குமாறு]

635. புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
தெளிநிலை யுடைய ஏகாரம் வரலே. (௩௪)

[விளியேற்கும் பெயர்கள் சேய்மைக்கண் அளபிறந்து ஒலிக்கும் என்பது]

636. உளனெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான. (௩௫)

[அம்ம என்னும் அசைச்சொல்லும் விளியேற்கும் என்பது]

637. அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே. (௩௬)

[உயர்திணைப்பெயருள் விளி ஏலாதன இவை என்பது]

638. த ந நு எ என அவைமுத லாகித்
தன்மை குறித்த னரளஎன் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே. (௩௭)

## 5. பெயரியல்

[சொற்கள் பொருள் குறித்தன என்பது]

639. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே. (க)

[சொல், தன்னையும் பொருளையும் உணர்த்தும் என்பது]

640. பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர். (உ)

[சொல், குறிப்பானும் வெளிப்படையானும் பொருள் உணர்த்தும் என்பது]

641. தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே. (௩)

[சொற்களின் பாகுபாடு]

642. சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே. (௪)

643. இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப. (௫)

[பெயர்ச்சொல் இன்னதென்பது]

644. அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே. (௬)

645. இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான. (௭)

[உயர்திணைப் பெயர்]

646. அவ்வழி
அவன்இவன் உவன்என வரூஉம் பெயரும்
அவள்இவள் உவள்என வரூஉம் பெயரும்
அவர்இவர் உவர்என வரூஉம் பெயரும்
யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே. (௮)

647. ஆண்மை அடுத்த மகனென் கிளவியும்
பெண்மை அடுத்த மகளென் கிளவியும்
பெண்மை அடுத்த இகர இறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்
சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன. (௯)

648. எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகனென் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர். (௧௦)

649. நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோ
டன்றி அனைத்தும் அவற்றியல் பினவே. (௧௧)

650. அன்ன பிறவும் உயர்திணை மருங்கில்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே. (௧௨)

[அஃறிணைப் பெயர்]

651. அதுஇது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே. (௧௩)

652. பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பி னாகிய பெயர்நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன. (௧௪)

653. கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலஅறி சொற்கே. (௧௫)

654. அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே. (௧௬)

[அஃறிணை இயற்பெயர் பால் உணர்த்துமாறு]

655. தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே. ()

[விரவுப்பெயர் பால் தெரிய நிற்குமாறு]

656. இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையில்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே. (௧௮)

657. நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான. (௧௯)

[விரவுப் பெயர்]

658. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவும் ஆஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே.

[விரவுப்பெயரின் பாகுபாடு]

659. அவற்றுள்
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டா குமே
ஏனைப் பெயரே தத்தம் மரபின. (௨௧)

[இயற்பெயர்]

660. அவைதாம்
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே. (௨௨)

[சினைப்பெயர்]

661. பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே. (௨௩)

[சினைமுதற் பெயர்]

662. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே

பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே. (உச)

[முறைப் பெயர்]

663. பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. (உரு)

[பெண்மை சுட்டிய விரவுப் பெயர்]

664. பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே. ()

[ஆண்மை சுட்டிய விரவுப் பெயர்]

665. ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே. (உஎ)

[பன்மை சுட்டிய விரவுப் பெயர்]

666. பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே. (உஅ)

[ஒருமை சுட்டிய விரவுப் பெயர்]

667. ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே. (உகூ)

[தாம் என்னும் விரவுப் பெயர்]

668. தாம்என் கிளவி பன்மைக் குரித்தே. (௩0)

[தான் என்னும் விரவுப் பெயர்]

669. தான்என் கிளவி ஒருமைக் குரித்தே. (௩௧)

[எல்லாம் என்னும் விரவுப் பெயர்]

670. எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே. (௩௨)

[எல்லாம் என்பது உயர்திணையில் தன்மைப் பன்-
மையில் வரும் என்பது]

671. தன்னுள் ளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்க மில்லை. (௩௩)

[நீயிர் நீ என்ற சொற்கள் பாலுணர்த்தா என்பது]

672. நீயிர் நீயென வரூஉங் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள. ()

[நீ என்ற சொல் ஒருமை உணர்த்தும் என்பது]

673. அவற்றுள்
நீயென் கிளவி ஒருமைக் குரித்தே. (௩௫)

[நீயிர் என்பது பன்மை உணர்த்தும் என்பது]

674. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே. (௩௬)

[ஒருவர் என்பது உயர்திணை ஆண்பால் பெண்பால்-
களுக்குப் பொது என்பது]

675. ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை. (௩௭)

[ஒருவர் என்பது பன்மைவினை ஏற்கும் என்பது]

676. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும். (௩௮)

[நீயிர் நீ ஒருவர் என்பவற்றின் பால் தெரியுமாறு]

677. இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல். (௩௯)

[பெண்மகள் என்னும் பெயர் பெண்பாற்குரிய வினை
கொள்ளும் என்பது]

678. மகடூஉ மருங்கிற் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான. (௪௦)

[ஆ ஈறு செய்யுளில் ஓவாகத் திரிந்து நிற்றல்]

679. ஆஓ ஆகும் பெயருமார் உளவே
ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே (சக)

[கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை
சுட்டாது என்பது]

680. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்ற லான. (சஉ)

681. திணையொடு பழகிய பெயரலங் கடையே. (சங)

## 6. வினை இயல்

[வினைச்சொல் இன்னதென்பது]

682. வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும். (க)

[காலம் மூன்று என்பது]

683. காலந் தாமே மூன்றென மொழிப. (உ)

[காலத்தின் பெயர்]

684. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை உடைய தோன்ற லாறே. (ங)

[வினைச் சொற்களின் பாகுபாடு]

685. குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே. (ச)

[உயர்திணைத் தன்மைப் பன்மை வினைமுற்று]

686. அவைதாம்
அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியோ டாயெண் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே. (௫)

[உயர்திணைத் தன்மை யொருமை வினைமுற்று]

687. கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே. (௬)

[‘செய்கு’ என்னும் வாய்பாட்டு வினைமுற்று வினை
கொண்டு முடிதல்]

688. அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர். (௭)

[உயர்திணைப் படர்க்கையொருமை வினைமுற்று]

689. அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே. (௮)

[உயர்திணைப் படர்க்கைப்பன்மை வினைமுற்று]

690. அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே. (௯)

[‘செய்மார்’ என்னும் வாய்பாட்டு வினைமுற்று வினை
கொண்டு முடியும் என்பது]

691. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப. (௧௦)

[உயர்திணை வினைமுற்றின் தொகை]

692. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்று தலையிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே. (கக)

[உளப்பாட்டுத் தன்மை வினைமுற்றுத் திரிந்து முடிதல்]

693. அவற்றுள்
பன்மை உரைக்குந் தன்மைக் கிளவி
எண்ணியன் மருங்கில் திரிபவை யுளவே. (கஉ)

['யார்' என்னும் குறிப்புமுற்று உயர்திணை முப்பாற்கும் உரித்தென்பது]

694. யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே. (கங)

[ஆகார ஈற்று வினைமுற்று செய்யுளில் ஓகார ஈறாய்த் திரியும் என்பது]

695. பாலறி மரபின் அம்மூ ஈற்றும்
ஆ ஓ வாகும் செய்யு ளுள்ளே. (கச)

696. ஆயென் கிளவியும் அவற்றொடு கொள்ளும். (கரு)

[உயர்திணைக் குறிப்பு வினைமுற்று]

697. அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும். (கசு)

698. அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம். (கஎ)

[உயர்திணைக் குறிப்பு வினைமுற்றின் ஈறு.]

699. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே. (௧௮)

[அஃறிணைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று]

700. அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை. (௧௯)

[அஃறிணை ஒருமைத் தெரிநிலை வினைமுற்று]

701. ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றியல் உகரத் திறுதி யாகும். (௨௦)

[அஃறிணை வினைமுற்றின் தொகை]

702. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே. (௨௧)

['எவன்' என்னும் குறிப்புமுற்று அஃறிணை இருபாற்-
கும் உரித்து என்பது]

703. அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினவே. (௨௨)

[அஃறிணைக் குறிப்பு வினைமுற்று]

704. இன்றில உடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும். (௨௩)

[அஃறிணைக் குறிப்பு வினைமுற்றின் ஈறு]

705. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே. (உ௪)

[விரவுவினையின் பெயரும் முறையும் தொகையும்]

706. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யுஞ் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
பிரிபுவேறு படூஉஞ் செய்திய ஆகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய. (உ௫)

[முன்னிலை யொருமை வினைமுற்று]

707. அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆய்என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும் (உ௬)

[முன்னிலைப் பன்மை வினைமுற்று]

708. இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர். (உ௭)

[முன்னிலை யொழிந்த எனை வினைகள்]

709. எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே. (உ௮)

[வியங்கோள் வினைமுற்று தன்மை முன்னிலையில்
வாராது என்பது]

710. அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி. (௨௯)

['செய்யும்' என்னும் முற்று செல்லாத இடம்]

711. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா. (௩௦)

[வினையெச்ச வாய்பாடு]

712. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி. (௩௧)

713. பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே. (௩௨)

[வினைமுதல் வினைகொண்டு முடியும் வினையெச்சம்]

714. அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின. (௩௩)

715. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர். (௩௪)

[ஒழிந்த வினையெச்சங்கள் இருவினையுங் கொண்டு
முடியும் என்பது]

716. ஏனை யெச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப. (௩௫)

[வினையெச்சங்கள் அடுக்கியவழி முடியுமாறு]

717. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே. (௩௬)

[பெயரெச்சங்கொண்டு முடியுஞ் சொற்கள்]

718. நிலனும் பொருளும் * காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் † உளப்பட
அவ்வறு பொருட்கு மோரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே. (௩௭)

719. அவற்றொடு வருவழிச் ‡ செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே. (௩௮)

[இருவகை எச்சமும் எதிர்மறைவினையும் கொண்டு முடியும் என்பது]

720. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா.

[எச்சங்களுக்கும் முடிக்குஞ் சொற்களுக்கும் இடையில் பிறசொற்கள் வரும் என்பது]

721. தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார். (௪0)

['செய்யும்' என்னும் பெயரெச்சம் ஈறுகெடுமென்பது]

722. அவற்றுள்
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர். (௪௧)

---

* காலையும — இளம்பூரணர்.

† உளப்பட்ட — இளம்பூரணர்.

‡ செய்யும் கிளவி — எடு.

[இறந்தகால வினையெச்சம் எதிர்காலத்தும் வரும் என்பது]

723. செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம். (சஉ)

[முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை நிகழ் காலத்தாற் கூறவேண்டும் என்பது]

724. முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

[விரைவின்கட் காலம் மயங்கும் என்பது — காலவழுவமைதி]

725. வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர். (சச)

[சிறப்பின்கண்ணும் காலம் மயங்குமென்பது — காலவழுவமைதி]

726. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா குமே.

['இது செயல் வேண்டும்' என்பது ஈரிடத்துப் பொருள் தரும் என்பது]

727. இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டா குமே
தன்பா லானும் பிறன்பா லானும். (சசு)

[வற்புறுத்தலின்கண் வினா எதிர்மறைப் பொருள் தரும் என்பது]

728. வன்புற வருஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையும் உடைத்தே.

[இயற்கைக் கண்ணும் தெளிவின் கண்ணும் காலம் மயங்கும் என்பது]

729. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை. (ச-அ)

[செயப்படுபொருள் வினைமுதல்போல வருமென்பது]

730. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே. ()

[வேறிடத்தும் காலம் மயங்கும் என்பது]

731. இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி. ()

732. ஏனைக் காலமும் மயங்குதல் வரையார். (நிக)

## 7. இடை இயல்

[இடைச்சொல் இன்ன தென்பது]

733. இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற்று இயலும் தமக்கியல் பிலவே. (க)

[இடைச்சொற்களின் பாகுபாடு]

734. அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்

வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை. (உ)

[இடைச்சொல் நிற்கும் இடமும் வேறுபடுமாறும்]

735. அவைதாம்
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய என்ப. (ங)

[‘மன்’ என்னும் இடைச்சொல்லின் பொருள்]

736. கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (ச)

[‘தில்’ என்ற சொல்லின் பொருள்]

737. விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே. (ரு)

[‘கொன்’ என்ற சொல்லின் பொருள்]

738. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே. (சு)

[‘உம்’ என்றதின் பொருள்]

739. எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்
றப்பால் எட்டே உம்மைச் சொல்லே. (எ)

[‘ஓ’ என்றதின் பொருள்]

740. பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே. (௮)

[‘ஏ’ என்றதின் பொருள்]

741. தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே. (௯)

[‘என’ என்றதின் பொருள்]

742. வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரொ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி. (௧௦)

[‘என்று’ என்றதின் பொருள்]

743. என்றென் கிளவியும் அதனோ ரற்றே. (௧௧)

[‘தில்’ என்பதற்குப் புறனடை]

744. விழைவின் தில்லை தன்னிடத்து இயலும். (௧௨)

[ஏ, ஓ என்பனவற்றிற்குப் புறனடை]

745. தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்
அளபின் எடுத்த இசைய என்ப. (௧௩)

[‘மற்று’ என்பதன் பொருள்]

746. மற்றென் கிளவி வினைமாற்று அசைநிலை
அப்பால் இரண்டென மொழிமனார் புலவர். (௧௪)

[‘எற்று’ என்பதன் பொருள்]

747. எற்றென் கிளவி இறந்த பொருட்டே. (௧௫)

[‘மற்றையது’ என்பதன் பொருள்]

748. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே. (௧௬)

['மன்ற' என்பதன் பொருள்]

749. மன்றஎன் கிளவி தேற்றஞ் செய்யும். (கஎ)

['தஞ்சம்' என்பதன் பொருள்]

750. தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே. (கஅ)

['அந்தில்' என்பதன் பொருள்]

751. அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகும இயற்கைத் தென்ப. (க௯)

['கொல்' என்பதன் பொருள்]

752. கொல்லே ஐயம். (உ௦)

['எல்' என்பதன் பொருள்]

753. எல்லே இலக்கம். (உக)

['ஆர்' என்னும் இடைச்சொல் முடிபு]

754. இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே. ()

755. அசைநிலைக் கிளவி யாகுவழி அறிதல். (உங)

['ஏ, குரை' என்னும் இடைச்சொற்களின் பொருள்]

756. *ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகும் இயற்கைய என்ப. (உச)

['மா' என்பது வருமிடம்]

757. மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல். ()

[முன்னிலை அசைச் சொற்கள்]

758. மியாஇக மோமதி இகும்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல். (உசு)

---

* ஏவும் — இளம்பூரணம்.

[சில முன்னிலை யசைச்சொற்களுக்குச் சிறப்புவிதி]

759. அவற்றுள்
இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்
தகுநிலை யுடைய என்மனார் புலவர். (௨௭)

['அம்ம' என்பதன் பொருள்]

760. அம்மகேட் பிக்கும். (௨௮)

['ஆங்க' உரையசை என்பது]

761. ஆங்க உரையசை. (௨௯)

[ஒப்பில் போலி]

762. ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும். (௩௦)

[அசைநிலைச் சொற்கள்]

763. யா கா
பிறபிறக் கரோபோ மாதென வரூஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி. (௩௧)

[பிரிவில் அசைநிலைச் சொற்கள்]

764. ஆக ஆகல் என்பது என்னும்
ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை. (௩௨)

['ஔ' என்பதன் பொருள்]

765. ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே 487.
ஆயியல் நிலையுங் காலத் தானும்
அளபெடை நிலையுங் காலத் தானும்
அளபெடை யின்றித் தான்வருங் காலையும்
உளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.

[சொல்லுவான் குறிப்பிற் பொருள் உணர்த்துஞ் சொற்கள்]

766. நன்றீற் * றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும். (௩௪)

[மயங்கி வாராத உம்மைகள்]

767. எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்
தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே. (௩௫)

[எச்சவும்மை நிற்கவேண்டிய இடம்]

768. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல். (௩௬)

[முற்றும்மை எச்சவும்மை யாதல் — வழுவமைதி]

769. முற்றிய உம்மைத் தொகைச்சொன் மருங்கின்
எச்சக் கிளவி உரித்தும் ஆகும். (௩௭)

[ஈற்றிசை ஏகாரத்திற்கு அளபு ஒன்றென்பது]

770. ஈற்றுநின் றிசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்தே. (௩௮)

[எண்ணுமிடத்து இறுதியில் தொகைச்சொல் வேண்டாத இடம்]

771. உம்மை எண்ணும் எனஎன் எண்ணும்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே. (௩௯)

[எண்ணேகாரம் இடையிட்டும் வரும் என்பது]

772. எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர். ()

* றேவு, மன்றீற் றேவு — இளம்பூரணம்.

['எனா, என்று' இரண்டும் எண்ணில் வருதல்]

773. உம்மை தொக்க எனாஎன் கிளவியும்
ஆ ஈ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன. (சக)

[எண்ணிடைச் சொற்களுள் தொகைபெற்று முடிய
வேண்டும் என்பது]

774. அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குறி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயி னாகிய எண்ணின் இறுதியும்
ஆவயின் வரினுந் தொகையின் றியலா. (சஉ)

[உம்மை எண்ணில் உருபு தொகுதல்]

775. உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார். ()

[உம், உந்து ஆகத் திரிதல்]

776. உம்உந் தாகும் இடனுமா றுண்டே. (சச)

[எண்ணிடைச் சொற்கள் வினைச் சொற்களோடும்
வரும் என்பது]

777. வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா
நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே. (சரு)

[எண்ணிடைச சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்]

778. என்றும் எனவும் ஒடுவும் தோன்றி
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே. (சசு)

[இடைச் சொற்களுக்குப் பொருள் கொள்ளுமாறு]

779. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்

வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே.

[இடைச்சொல் இயலுக்குப் புறனடை]

780. கிளந்த அல்ல * வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே. ( )

## 8 உரி இயல்

[உரிச்சொல் இன்னதென்பது]

781. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொ லாயினும் பொருள்வேறு கிளத்தல். ( )

[வெளிப்படை அல்லாத உரிச்சொற்கே பொருள் கூறுதல்]

782. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன. (௨)

[உறு, தவ, நனி]

783. அவைதாம்
உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப. (௩)

[உரு, புரை]

784. உருவுட் காகும் புரைஉயர் பாகும். (௪)

* அன்னபிறவும் — ஏடு

[குரு, கெழு]

785. குருவும் கெழுவும் நிறனா கும்மே. (ரு)

[செல்லல், இன்னல்]

786. செல்லல் இன்னல் இன்னா மையே (சா)

[மல்லல்]

787. மல்லல் வளனே. (எ)

[ஏ]

788. ஏ பெற் றாகும். (அ)

[உகப்பு, உவப்பு]

789. உகப்பே உயர்தல் உவப்பே உவகை. (கூ)

[பயப்பு]

790 பயப்பே பயனாம். (௧0)

[பசப்பு]

791. பசப்பு நிறனாகும். (௧௧)

[இயைபு]

792. இயைபே புணர்ச்சி. (௧௨)

[இசைப்பு]

793. இசைப்புஇசை யாகும். (௧௩)

[அலமரல், தெருமரல்]

794. அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி. (௧௪)

[மழ, குழ]

795. மழவும் குழவும் இளமைப் பொருள. (௧௫)

[சீர்த்தி]

796. சீர்த்தி மிகுபுகழ். (௧௬)

[மாலை]

797. மாலை இயல்பே. (கஎ)

[கூர்ப்பு, கழிவு]

798. கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும். (கஅ)

[கதழ்வு, துனைவு]

799. கதழ்வும் துனைவும் விரைவின் பொருள. (கக)

[அதிர்வு, விதிர்ப்பு]

800. அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும். (உ0)

[வார்தல், போகல், ஒழுகல்]

801. வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்மையும் நெடுமையும் செய்யும் பொருள. (உக)

[தீர்தல், தீர்த்தல்]

802. தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும். ()

[கெடவரல், பண்ணை]

803. கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு. ()

[தட, கய, நளி]

804. தடவும் கயவும் நளியும் பெருமை. (உச)

[தட என்பது வளைவையும் உணர்த்தும் என்பது]

805. அவற்றுள்,
தடஎன் கிளவி கோட்டமும் செய்யும். (உரு)

[கய என்பது மென்மையையும் உணர்த்தும் என்பது]

806. கயஎன் கிளவி மென்மையும் ஆகும். (உசா)

[நளி என்பது செறிவையும் உணர்த்தும் என்பது]

807. நளிஎன் கிளவி செறிவும் ஆகும். (உஎ)

[பழுது]

808 பழுது பயமின்றே. (உஅ)

[சாயல்]

809. சாயல் மென்மை. (உகூ)

[முழுது]

810. முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே. (௩0)

[வம்பு]

811. வம்பு நிலையின்மை. (௩க)

[மாதர்]

812. மாதர் காதல். (௩உ)

[நம்பு, மே]

813. நம்பும் மேவும் நசையா கும்மே. (௩௩)

[ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்]

814. ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம். (௩௪)

[புலம்பு]

815. புலம்பே தனிமை. (௩ரு)

[துவன்று]

816. துவன்று நிறைவாகும். (௩கூ)

[முரஞ்சல்]

817. முரஞ்சல் முதிர்வே. (௩எ)

[வெம்மை]

818. வெம்மை வேண்டல் (௩அ

[பொற்பு]

819. பொற்பே பொலிவு. (௩௯)

[வறிது]

820. வறிது சிறிதாகும். (௪0)

[ஏற்றம்]

821. ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும். (௪௧)

[பிணை, பேண்]

822. பிணையும் பேணும் பெட்பின் பொருள. (௪௨)

[பணை]

823. பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும். (௪௩)

[படர்]

824. படரே உள்ளல் செலவும் ஆகும். (௪௪)

[பையுள், சிறுமை]

825. பையுளும் சிறுமையும் நோயின் பொருள. (௪௫)

[எய்யாமை]

826. எய்யா மையே அறியா மையே. (௪௬)

[நன்று]

827. நன்று பெரிதாகும். (௪௭)

[தா]

828. தாவே வலியும் வருத்தமும் ஆகும். (௪௮)

[தெவு]

829. தெவுக் கொளற்பொருட்டே. (௪௯)

[தெவ்]

830. தெவ்வுப் பகைஆகும். (௫0)

[விறப்பு, உறப்பு, வெறுப்பு]

831. விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே. (நக)

[விறப்பு அச்சத்தையும் உணர்த்தும் என்பது]

832. அவற்றுள்,
விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும். (நஉ)

[கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்]

833. கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள. (நங)

[அழுங்கல், இரக்கத்தையும் கேட்டையும் உணர்த்தும் என்பது]

834. அவற்றுள்,
அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும். (நச)

[கழும்]

835. கழுமென் கிளவி மயக்கம் செய்யும். (நரு)

[செழுமை]

836. செழுமை வளனும் கொழுப்பும் ஆகும். (நசா)

[விழுமம்]

837. விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும். (நஎ)

[கருவி]

838. கருவி தொகுதி. (நஅ)

[கமம்]

839. கமம் நிறைந்தியலும். (நகா)

[அரி]

840. அரியே ஐம்மை. (சாO)

[கவவு]

841. கவவு அகத்திடுமே. (௬௧)

[துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல்]

842 துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர். (௬௨)

[இரங்கல் கழிவாகிய குறிப்பை உணர்த்தும் என்பது]

843. அவற்றுள்,
இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும். (௬௩)

[இலம்பாடு, ஒற்கம்]

844. இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை. (௬௪)

[ஞெமிர்தல், பாய்தல்]

845. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள. ()

[கவர்வு]

846. கவர்வு விருப்பாகும். (௬௬)

[சேர்]

847. சேரே திரட்சி. (௬௭)

[வியல்]

848. வியலென் கிளவி அகலப் பொருட்டே. (௬௮)

[பே, நாம், உரும்]

849. பேநாம் உருமென வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள. (௬௯)

[வய]

850. வய வலியாகும். (௭0)

[வாள்]

851. வாள் ஒளியாகும். (௭௧)

[துய]

852. துயவென் கிளவி அறிவின் திரிபே. (௭௨)

[உயா]

853. உயாவே உயங்கல். (௭௩)

[உசா]

854. உசாவே சூழ்ச்சி. (௭௪)

[வயா]

855. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம். (௭௫)

[கறுப்பு, சிவப்பு]

856. கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள. (௭௬)

[மேற்கூறியன நிறப்பண்பையும் உணர்த்தும் என்பது]

857. நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப. (௭௭)

[நொசிவு, நுழைவு, நுணங்கு]

858. நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை. (௭௮)

[புனிறு]

859. புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே. ()

[நன]

860. நனவே களனும் அகலமும் செய்யும். (௮௦)

[மத]

861. மதவே மடனும் வலியும் ஆகும். (௮௧)

[மத, வேறுபொருளும் உணர்த்தும் என்பது]

862. மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே. (௮௨)

[யாணர்]

863. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி. (௮௩)

[அமர்தல்]

864. அமர்தல் மேவல். (௮௪)

[யாணு]

865. யாணுக் கவினும். (௮௫)

[பரவு, பழிச்சு]

866. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள. (௮௬)

[கடி]

867. கடி என் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற்று ஆயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே. (௮௭)

[கடி, வேறுபொருளும் உணர்த்தும் என்பது.]

868. ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே. (௮௮)

[ஐ]

869. ஐவியப் பாகும். (௮௯)

[முனைவு]

870. முனைவு முனிவாகும். (௯0)

[வை]

871. வையே கூர்மை. (௯௧)

[எறுழ்]

872. எறுழ் வலியாகும். (௯௨)

[உரிச்சொல் வரலாற்று முறையாற் பொருளுணர்த்தும் என்பது.]

873. மெய்பெறக் கிளந்த உரிச்சொல் லெல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி

ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே. (கூகூ)

[உரிச்சொல் கூறப்பட்ட பொருளேயன்றிப் பிற
பொருளும் உணர்த்தும் என்பது]

874. கூறிய கிளவிப் பொருணிலை யல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே. ()

[பொருளுணர்த்தும் முறைமை]

875. பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம் பின்றே()

876. பொருட்குத்திரி பில்லை உணர்த்த வல்லின். ()

[பொருளுணர்தல் உணர்வோரது ஆற்றலுக்குத் தக்க-
படி என்பது]

877. உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே. (கூஎ)

[சொற்காரணம் வெளிப்படத் தோன்றாது என்பது]

878. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா

[உரிச்சொல் பிரிக்கப்படா என்பது]

879. எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே()

[உரிசசொற்கெல்லாம் ஆவதொரு புறனடை]

880. அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை ஆணையிற் கிளந்தவற் றியலால்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர். (௪00)

# ௯. எச்ச இயல்

[சொற்களின் வகை]

881. இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே. (க)

[இயற்சொல்]

882. அவற்றுள்,
இயற்சொல தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே. ()

[திரிசொல்]

883. ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி. (ந)

[திசைசசொல்]

884. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி. (ச)

[வடசொல்]

885. வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. (ரு)

886. சிதைந்தன வரினும் இயைந்தன வரையார். (சா)

[சொற்கள் அடையும் விகாரம்]

887. அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர். (எ)

[பொருள்கோள் வகை]

888. நிரனிறை சுண்ணம அடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே (௮)

[நிரனிறைப் பொருள்கோள்]

889. அவற்றுள்,
நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல். ()

[சுண்ணப் பொருள்கோள்]

890. சுண்ணம் தானே
பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல் (௧௦)

[அடிமறிப் பொருள்கோள்]

891. அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே. (௧௧)

892. பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்
தோற்றமும் வரையார் அடிமறி யான. (௧௨)

[மொழிமாற்றுப் பொருள்கோள்]

893 மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல். ()

[கிளைப்பெயர்கள் பகுக்கப்படா என்பது]

894. தநநு எனவும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா. (௧௪)

[சொல்லடுக்கின் வகை]

895. இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே. (கரு)

[தொகைச் சொல்லின் வகை]

896. வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே. (கசா)

[வேற்றுமைத் தொகை]

897. அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல. (கஎ)

[உவமத் தொகை]

898. உவமத் தொகையே உவம இயல. (கஅ)

[வினைத்தொகை]

899. வினையின் தொகுதி காலத் தியலும். (ககூ)

[பண்புத் தொகை]

900. வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே. (உ0)

[உம்மைத் தொகை]

901. இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே (உக)

[அன்மொழித் தொகை]

902. பண்புதொக வரூஉம் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே. ()

[தொகைச் சொற்களில் பொருள் நிற்குமாறு]

903. அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே. (உரு)

[தொகைச்சொல் எல்லாம் ஒருசொல் நீர்மைய என்பது]

904. எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய. (உச)

[உயர்திணை உம்மைத்தொகை முடிபு]

905. உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர். ()

[குறிப்பு மொழியின் இலக்கணம்]

906. வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை யெல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன வென்னும் குறிப்புரை யாகும். (உசா)

[சொல்லடுக்கின் எல்லை]

907. இசைபடு பொருளே நான்குவரம் பாகும். (உஎ)

908. விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும். (உஅ)

[அசைநிலை யடுக்கு]

909. கண்டீர் என்ற கொண்டீர் என்ற
சென்ற தென்ற போயிற் றென்ற

அன்றி அனைத்தும் வினவொடு சிவணி
நின்றவழி அசைக்கும் கிளவி என்ப. (௨௯)

910. கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே. (௩0)

[வினை முற்றின் இயல்பு]

911. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தான் வினையினும் குறிப்பினும்
மெய்ம்மை யானும் ஈரிரண் டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே. (௩௧)

[இடம் உணர்த்தா வினைமுற்றுக்கள்]

912. எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும். (௩௨)

[வினைமுற்றுக்கள் பெயரொடு முடியும் என்பது]

913. அவைதாம்
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே. (௩௩)

[எச்சத்தின் வகை]

914. பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி. ()

[பிரிநிலையெச்சம்]

915. அவற்றுள்
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின. (௩௫)

[வினையெச்சம்]

916. வினைஎஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே. (௩௬)

[பெயரெச்சம்]

917 பெயர்எஞ்சு கிளவி பெயரொடு முடிமே. (௩௭)

[ஒழியிசையெச்சம்]

918. ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின. (௩௮)

[எதிர்மறையெச்சம்]

919. எதிர்மறை எச்சம எதிர்மறை முடிபின. (௩௯)

[உம்மையெச்சம்]

920 உம்மை எச்சம் இருவீற் றானும்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே. (௪0)

921. தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான. (௪௧)

[என என்எசசம்]

922. எனஎன் எச்சம் வினையொடு முடிமே. (௪௨)

[முடிக்குஞ்சொல் பெறா எச்சங்கள்]

923. எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப. (௪௩)

924. அவைதாம்
தத்தங் குறிப்பின் எச்சஞ் செப்பும். (௪௪)

925. சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே. (௪௫)

[இடக்கர்ச் சொல்லைக் கூறுமாறு]

926. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல். (சசு)

927. மறைக்குங் காலை மரீஇய தொராஅல். (சஎ)

[இரத்தலை உணர்த்தும் சொற்கள்]

928. ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய. (சஅ)

929. அவற்றுள்
ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே. (சகூ)

930. தாவென் கிளவி ஒப்போன் கூற்றே. (ரு0)

931. கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே. (ருக)

[கொடு என்பது தன்மையிடத்தும் செல்லும் என்பது]

932. கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர். (ருஉ)

[சொற்களின் வழுவமைதி]

933. பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்துங் கடப்பா டிலவே. (ருங)

[செய்யாய் என்பது ஈறுகெட்டுச் செய் என நிற்றல்]

934. செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே. (ருச)

[முன்னிலை வினைச்சொல் அடையும் விகாரம்]

935. முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே. (ருரு)

[சொற்களைப் பற்றிய பாதுகாவல்]

936. கடிசொல் இல்லைக் காலத்துப் படினே. (ருசு)

[சொற்களைக் குறைககுமாறு]

937. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்.()

938. குறைத்தன வாயினும் நிறைப்பெயர் இயல (ருஅ)

[இடைச்சொல்லின்குணம் சொல்லை வேறுபடுக்கும் என்பது]

939. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.()

[உரிச சொல்லிலும் அத்தன்மைசசொல் உண்டென் பது]

940. உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய.(சுo)

[வினையெசசம் பல இலக்கணத்தை உடையது என்பது]

941. வினைஎஞ்சு கிளவியும் வேறுபல் குறிய. (சுக)

[வழக்கிடத்து மாறுபாடுடைய சொற்கள் உடனிற்கும் என்பது]

942. உரையிடத் தியலும் உடனிலை அறிதல். (சுஉ)

[சொல்வான் குறிப்பால் உணரும் பொருளும் உள என்பது]

943. முன்னத்தின் உணருப கிளவியும் உளவே
இன்ன வென்னும் சொலமுறை யான. (சுங)

[ஒரு பொருள்மேல் இருசொல்வரும் என்பது]

944. ஒருபொரு ளிருசொல் பிரிவில வரையார். (சுச)

[ஒருமைப் பெயர் பன்மைப் பொருளிலும் வரும் என்பது]

945. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகும் இடனுமா ருண்டே. (சுரு)

[ஆற்றுப்படையில் முன்னிலை ஒருமைப்பெயர் பன்மை வினையொடு முடியும் என்பது]

946. முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும் ()

[சொற்களை நூல்நெறி பிழையாது பிரித்துக் காட்டல் வேண்டும் என்பது]

947. செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியி னூனெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல். (சுஎ)

சொல்லதிகாரம் முற்றிற்று.

---

[சொல்லதிகாரத்தில் அடங்கும் இயல்களின் பெயரும் அவற்றின் முறையும்]

வெண்பா

கிளவியாக் கம்வே றுமைசொல்
லுளவேற் றுமைமயக்கம் ஓங்கும் — விளிமரபு
தேற்றும் பெயர்வினைசொற் சேரு மிடையுரிசொல்
தோற்றியிடும் எச்சவியல் சொல்.

[இவ்வதிகாரத்திற் கண்ட இயல்களின் தொகையும்
நூற்பாக்களின் தொகையும்]

## வெண்பா

தோடவிழ் பூங்கோதாய் சொல்லதி காரத்துட்
கூடிய ஒன்பதியற் கூற்றிற்கும — பாடமாம்
நானூற் றறுபத்து நான்கேநன் னூற்பாக்கள்
மேனூற்று வைத்தனவா மே.

## விருத்தம்

கிளவியோ ராறுபா னிரண்டுவேற் றுமையிற்
கிளர்நூ றஃதிரண் டேழைந்
துளமயங் கியலாம் விளியின்முப் பானே
ழுயர்பெயர் நாற்பதின் மூன்று
தெளிவினை யியலைம் பானுட னொன்று
செறியிடை யியலினாற் பானெட்
டொளிருரி யியலொன் பதிற்றுப்பத தடனெட்
டொழிபது பானின்மே லேழே.

# சூத்திர முதற் குறிப்பு

# சூத்திர முதற் குறிப்பு

## எழுத்ததிகாரம்


| | | | |
|---|---|---|---|
| அ, ஆ, உ, ஊ | 24 | அம்மு வாறும் | 4 |
| அஆ என்னும் | 25 | அரையளபு குறுகல் | 3 |
| அ-இ-உ அம் | 5 | அரையென வருஉம் | 22 |
| அஃறிணை விரவும் | 20 | அல்லதன் மருங்கிற் | 44 |
| அகம்என் கிளவிக் | 42 | அல்லது கிளப்பினும் - வேற்றுமை | 43 |
| அகர ஆகாரம் | 42 | அல்லது கிளப்பினும் - வேற்றுமைக் கண் | 54 |
| அகர இகரம்- | 7 | அல்லது கிளப்பின் இய- | 43 |
| அகர இறுதிப் | 28 | அல்லது கிளப்பின்எல்லா | 56 |
| அகர உகரம்- | 7 | அல்வழியெல்லாம் இயல்- | 48 |
| அகரத் திம்பர் | 8 | அல்வழியெல்லாம் உற | 49 |
| அக்கென் சாரியை- | 37 | அல்வழியெல்லாம் உற | 52 |
| அடையொடு | 43 | அல்வழியெல்லாம் மெல்- | 42 |
| அணரி நுனிநா | 11 | அவற்றுள் அஆ ஆயிரண் | 11 |
| அண்ணஞ் சேர்ந்த | 12 | அவற்றுள் அ, இ, உ | 1 |
| அண்ண நண்ணிய | 11 | அவற்றுள் இகர | 20 |
| அதனிலை உயிர்க்கும் | 63 | அவற்றுள் இன்னின் | 15 |
| அத்தவண் வரினும் | 30 | அவற்றுள் ஈரொற்றுத் | 53 |
| அத்திடை வருஉங்- | 23 | அவற்றுள் காமுங்கானும் | 17 |
| அத்தின் அகரம் | 16 | அவற்றுள் ணனஃகான்- | 4 |
| அத்தே வற்றே | 17 | அவற்றுள் நிறுத்தசொல்- | 13 |
| அத்தொடு சிவணும் | 43 | அவற்றுள் மெய்யீறெல்- | 13 |
| அந்நான் மொழியும் | 56 | அவற்றுள் மெல்லெழுத்- | 19 |
| அப்பெயர் மெய்யொழித்- | 47 | | |
| அம்மின் இறுதி | 16 | | |

அவற்றுள் ரகாரழகாரங்- 7
அவற்றுள் லளஃகான் - 4
அவற்றுவழி மருங்கிற் - 15
அவைதாம் இயற்கைய - 27
அவைதாம் இன்னே - 15
அவைதாம் குற்றியலிகரம் 1
அவைதாம் முன்ப - 18
அவைதாம் மெய்ப்பிறிதா - 14
அவையூர் பத்தினும் - 62
அவ்வழி பன்னீ ருயிரும்- 10
அவ்வா றெழுத்தும் - 11
அவ்வியல் நிலையும் - 3
அழனே புழனே - - 27
அழன்என் இறுதி - - 47
அளந்தறி கிளவியும் - 58
அளபிறந் துயிர்த்தலும் - 5
அளவாகு மொழிமுதல் - 16
அளவிற்கும் நிறையிற்கும் 23
அளவும் நிறையும் ஆயி
யல் திரியா - - 62
அளவும் நிறையும் ஆயி
யல் திரியாது - - 62
அளவும் நிறையும் எண் 51
அளவும் நிறையும் வேற்று 43
அன்றுவரு காலை - - 35
அன்ன என்னும் - - 29
அன்னேன் சாரியை - 27
ஆ-ஈ-ஊ ஏ-ஐ - - 2
ஆ எ ஒ எனும் - - 8
ஆ-ஏ-ஒ அம் - - 5
ஆகார இறுதி - - 30
ஆடூஉ மகடூஉ - - 37
ஆணும் பெண்ணும் - 41
ஆண்மரக் கிளவி - - 41
ஆதனும் பூதனும் - - 47
ஆயிரக் கிளவி - - 61
ஆயிரம் வரினும் - - 57
ஆயிரம் வரினே - - 62
ஆயிரம் வருவழி - - 52
ஆய்தம் நிலையலும் - 52
ஆரும் வெதிரும் - - 49
ஆவயின் வல்லெழுத்து - 41
ஆவும் மாவும் - - 31
ஆவோ டல்லது - - 8
ஆற னுருபினும் - - 22
ஆற னுருபின் - - 15
ஆறன் மருங்கிற் - - 61
ஆறென் கிளவி - - 60
ஆனின் னகரமும் - - 16
ஆன்ஒற் றகரமொடு - 32
ஆன்முன் வருஉம் - - 32
இ ஈ எ ஏ ஐ யென - 11
இகர இறுதிப் - - 32
இகர யகரம் - - 8
இக்கின் இகரம் - - 16
இடம்வரை கிளவி - 35
இடைநிலை ரகரம் - - 58
இடைப்படிற் குறுகும் - 5
இடையெழுத் தென்ப - 4
இடை யொற்றுத் - - 54
இதழியைந்து பிறக்கும் - 12
இயற்பெயர் முன்னர்த் - 46
இரண்டு முதல் ஒன்பான் 63
இராவென் கிளவிக் - 31
இருதிசை புணரின் - 56
இருள்என் கிளவி - - 53
இலமென் கிளவிக்குப் - 43
இல்என் கிளவி - - 50

இல்ல மரப்பெயர் - - 42
இல்லொடு கிளப்பின் - 40
இறுஅல் தோற்றம் - 16
இனி அணி என்னுங் - 33
இன் இடை வரூஉம் - 25
இன்றி என்னும் - - 33
இன்னென வரூஉம் - 17
ஈகார இறுதி - - 34
ஈமுங் கம்மும் - - 44
ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் - - 54
ஈரெழுத்து மொழியும்வல் 55
ஈரெழுத் தொருமொழி - 53
ஈறியன் மருங்கினும் - 6
ஈறியன் மருங்கின் - 23
உ-ஊ ஒ-ஓ என்னும் - 8
உ ஊ ஒ ஓ ஔ வென - 11
உ ஊ காரம் நவவொடு - 9
உகர இறுதி - - 35
உகரமொடு புணரும் - 22
உச்சகாரம் இரு - - 9
உச்ச காரமொடு - - 10
உட்பெறு புள்ளி - - 3
உணரக் கூறிய - - 53
உண்டேன் கிளவி - 56
உதிமரக் கிளவி - - 34
உந்தி முதலா - - 10
உப்ப காரமொடு - - 10
உப்பகாரம் ஒன்றென - 9
உம்மை யெஞ்சிய - - 31
உயர்திணைப் பெயரே - 15
உயர்திணை யாயின் உரு- 43
உயர்திணை யாயினம் - 26
உயிரிறு சொன்முன் - 16
உயிரீ றாகிய உயர்திணை - 20
உயிரீ றாகிய முன்னிலை - 20
உயிரும் புள்ளியும் இறுதி யாகி அளவும் - - 22
உயிரும் புள்ளியும் இறுதி யாகிக் குறிப்பினும் - 63
உயிர்ஔ எஞ்சிய - - 9
உயிர்முன் வரினும் - 29
உயிர்முன் வரினும்- - 52
உயிர்மெய் யல்லன - 8
உயிர்மெய்யீறும் - - 13
உரிவரு காலை - - 33
உருபியல் நிலையும் - - 40
உருவினும் இசையினும் - 6
உரைப்பொருட் கிளவி - 30
ஊகார இறுதி - - 36
ஊவென் ஒருபெயர் - 37
எ என வருமுயிர் - - 9
எகர ஒகரத் - - 3
எகர ஒகரம் - - 37
எகின்மர மாயின் - - 45
எஞ்சிய எல்லாம் - - 9
எட்டன் ஒற்றே - - 58
எண்ணின் இறுதி - 27
எண்ணுப் பெயர்க்கிளவி- 55
எப்பெயர் முன்னரும் - 16
எருவுஞ் செருவும் - - 36
எல்லா எழுத்தும் - - 12
எல்லா மொழிக்கும் - 18
எல்லாம் என்னும் - 26
எல்லாரும் என்னும்பட - 26
எழுத்தெனப்படுப - - 1
எழுத்தோ ரன்ன - - 18
ஏ - ஒ எனுமுயிர் - - 9

ஏகார இறுதி - - 37
ஏயென் இறுதிக் - - 38
ஏழனுரு பிற்குத் - - 28
ஏழ்என் கிளவி - - 51
ஏனவை புணரின் - 51
ஏனவை வரினே - - 35
ஏணப் புளிப்பெயர் - 34
ஏணமுன் வரினே - 56
ஏண யெகினே - - 45
ஏணவகரம் இன்னொடு - 25
ஏணவகரம் தொழிற் - 51
ஐ அம் பல் என - - 52
ஐ, ஒடு கு, இன் - - 14
ஐஔ என்னும் - - 6
ஐகார இறுதிப் - - 38
ஐகார ஔகாரங் - - 18
ஐந்தன் ஒற்றே மகாரம் - 58
ஐந்தன் ஒற்றே முந்தை - 59
ஐந்தன் ஒற்றேமெல் - 59
ஐந்தன் ஒற்றே யகார - 61
ஐந்தும் மூன்றும் - - 59
ஐயின் முன்னரும் - - 16
ஒடுமரக் கிளவி - - 36
ஒவ்வும் அற்றே - - 9
ஒழிந்ததன் நிலையும் - 39
ஒற்றிடை இனமிகா - 54
ஒற்றுநிலை திரியா - 55
ஒற்றுமிகு தகரமொடு - 46
ஒன்பான்இறுதி - 61
ஒன்பான்இறுதி - 60
ஒன்பான் ஒகரமிசைத் - 58
ஒன்பான் முதனிலை - 60
ஒன்று முதலாக எட்டன்- 57
ஒன்றுமுத லாகப் பத் - 27
ஒன்று முதலாகிய - 62
ஒன்று முதல் ஒன்பான் - 57
ஓகார இறுதி ஏகார - 39
ஓகாரஇறுதிக்கோன்னே- 25
ஓரளபாகும் இடனுமா - 8
ஓரெழுத் தொருமொழி - 6
ஔஎன வரூஉம் - - 20
ஔகார இறுதிப் - - 40
ஔகார இறுவாய் - 2
ககார ஙகாரம் - - 11
க, ச, த, ப, முதலிய - 18
க, ச, த, ப முதன்மொழி - 59
கண்ணிமைநொடியென- 2
க, த, ந, ப, ம எனும் - 8
கவவோ டியையின் - 9
காரமுங் கரமுங் - - 17
கிளந்த அல்ல - - 64
கிளைப்பெய ரெல்லாங் -
கிளை - - - 45
கிளைப்பெய ரெல்லாங் -
கொளத் - - - 42
கீழ்என் கிளவி - - 52
குமிழ்என் கிளவி - - 51
குயின்என் கிளவி - - 45
குறியதன் இறுதிச் - - 32
குறியதன் முன்னரும் - 31
குறியதன் முன்னர் - 6
குறுமையும் நெடுமையும்- 7
குறையென் கிளவி - 23
குற்றியலிகரம் - - 5
குற்றியலுகரக்கின்னே - 23
குற்றிய லுகரத் திறுதி - 27
குற்றிய லுகரமும் - - 13
குற்றிய லுகரம் முறைப்- 9

| | | | |
|---|---|---|---|
| குற்றெழுத் திம்பரும் - | 36 | ஞ,ந,ம,வ என்னும் - | 4 |
| குற்றெழுத் தைந்தும் - | 6 | டகார ணகாரம் - - | 11 |
| குன்றிசை மொழிவயின் - | 6 | ட, ற, ல, ள என்னும் - | 4 |
| கொடிமுன் வரினே- - | 39 | ணகார இறுதி - - | 41 |
| ங, ஞ, ண, ந, ம, ன - | 4 | ண,ளஎன் புள்ளிமுன்ட | 20 |
| சகரக் கிளவியும் - - | 8 | ணனஎன் புள்ளிமுன் - | 19 |
| சகார ஞகாரம் - - | 11 | தசரம் வருவழி - - | 49 |
| சார்என் கிளவி - - | 49 | தத்தந் திரிபே - - | 11 |
| சார்ந்துவரி னல்லது - | 12 | தமிழ்என் கிளவியும் - | 51 |
| சாவ என்னுஞ் - - | 29 | தம்மியல் கிளப்பின் - | 7 |
| சிறப்பொடு வருவழி - | 47 | தாழ்என் கிளவி - - | 51 |
| சுட்டின் இயற்கை - - | 33 | தாம்நாம் என்னும் - | 26 |
| சுட்டின் முன்னரும் - | 35 | தாயென் கிளவி - - | 48 |
| சுட்டின் முன்னர் - - | 29 | தானும் பேனுங் - - | 47 |
| சுட்டுச்சினை நீடிய - | 56 | தான்யான் எனும்பெயர்- | 47 |
| சுட்டு முதலாகிய இகர - | 21 | தான் யான் என்னும் - | 26 |
| சுட்டு முதலாகிய ஐயென்- | 24 | திங்களும் நாளும் - - | 39 |
| சுட்டுமுத லாகிய வகர - | 50 | திங்கள் முன்வரின் - | 34 |
| சுட்டு முதலிறுதி - உருபி - | 38 | திரிபுவேறு கிளப்பின் - | 57 |
| சுட்டு முதலிறுதி - வல்லெழுத்தியற்கை - | 36 | தெற்றெ னகரமுஞ் - - | 37 |
| | | தேன்என் கிளவி - - | 46 |
| சுட்டுமுதல் இறுதி யியல் - | 35 | தொடர் அல் இறுதி - | 30 |
| சுட்டு முதல் உகரம் - | 24 | தொழிற்பெய ரெல்லாந் - | 41 |
| சுட்டுமுதல் வகரம் - | 25 | தொழிற்பெய ரெல்லாந் - | 44 |
| சுட்டுமுதல் வயினும் - | 45 | தொழிற்பெயர் எல்லாம் - | 50 |
| செய்யா என்னும் - - | 31 | தொழிற்பெயர் எல்லாம் - | 52 |
| செய்யுளிறுதி- - - | 7 | நகர இறுதியும் - - | 41 |
| செய்யுள் மருங்கின் - | 39 | ந, ம, வ என்னும் - | 59 |
| சேவென் மரப்பெய - | 38 | நாட்பெயர்க் கிளவி - | 44 |
| ஞகாரை யொற்றிய - | 40 | நாள்முற் றோன்றுந் - | 34 |
| ஞ,ண, ந, ம ன, ய, ர, ல- | 9 | நாயும் பலகையும் - - | 50 |
| ஞ, ந என் புள்ளிக் - | 25 | நாவிளிம்பு வீங்கி- - | 12 |
| ஞ, ந, ம, ய வ எனு - | 19 | நான்கன்ஒற்றேலகாரம் - | 59 |
| ஞ, ந, ம, வ இயையினும்- | 40 | நான்கன் ஒற்றே லகார - | 61 |

நான்கன்ஒற்றேறகாரம் - 58
நான்கும் ஐந்தும் - - 60
நிலாவென் கிளவி- - 31
நிறுத்த சொல்லுங் - 14
நிறையும் அளவும் - 57
நீட வருதல் - - 29
நீட்டம் வேண்டின் - 2
நீயென் ஒரு பெயர்உரு - 35
நீயென் ஒரு பெயர்நெடு- 25
நீயென் பெயரும் - - 34
நும்என் இறுதி இயற்கை - 25
நும்என் ஒருபெயர் - 44
நும்மென் இறுதியும் - 22
நுனிநா அணரி - - 11
நூருயிரமுன் - - 61
நூறுமுன் வரினும் - 60
நூறூர்ந்து வரூஉம் - - 52
நூறென் கிளவி - - 61
நெடியதன் இறுதி - - 52
நெடியதன் இறுதி - 49
நெடியதன் முன்னர் - 22
நெட்டெழுத்திம்பரும் - 5
நெட்டெழுத் திம்பர் - 27
நெட்டெழுத் தேழே - 6
நெல்லும் செல்லும் - 49
படர்க்கைப் பெயரும் - 43
பதக்குமுன் வரினே - 33
பத்தன் ஒற்றுக் கெட - 57
பத்தென் கிளவி - - 51
பலரறி சொன்முன் - 23
பலவற் றிறுதி உருபியல் - 30
பலவற் றிறுதி நீடு- - 30
பல்லவை நுதலிய - - 24
பல்லித ழியைய - - 12
பனியென வரூஉங் - 33
பனையின் முன்னர் - 39
பனையும் அரையும் - 38
பனையென் அளவுங் - 23
பன்னீ ருயிரும் - - 8
பாழ்என் கிளவி - - 51
பீர்என் கிளவி - - 49
புணரியல் நிலையிடை - 5
புளிமரக் கிளவிக் - 34
புள்ளி இல்லா - - 3
புள்ளி இறுதியும் 28
புள்ளி இறுதியும் - - 20
புள்ளி யீற்றுமுன் - 18
புள்ளும் வள்ளும் - 53
பூல்வேல் என்று - 50
பூவென் ஒருபெயர் - 37
பெண்டென் கிளவிக் - 55
பெயரும் தொழிலும் - 17
பெற்ற மாயின் - - 38
பொன்என் கிளவி - 48
மஃகான் புள்ளி முன்
அத்தே - - - 25
மஃகான் புள்ளிமுன்வவ்- 4
மகப்பெயர்க் கிளவிக் - 30
மகர இறுதி வேற் - - 42
மகரத் தொடர்மொழி - 10
மகன்வினை கிளப்பின் - 48
மக்கள் என்னும் - - 53
மரப்பெயர்க் கிளவி - 30
மரப்பெயர்க் கிளவிக் - 55
மருவின் றொகுதி - - 14
மழையென் கிளவி - 39
மன்னுஞ் சின்னும் - 45
மாமரக் கிளவியும் - 32

மாறுகோள் எச்சமும் - 39
மாறுகோள் எச்சமும் - 37
மின்னும் பின்னும் - 46
மின்என் கிளவி - - 45
முதலா ஏன - - - 9
முதலீர் எண்ணினொற்று - 58
முதலீர் எண்ணின் முன் - 59
முதனிலை எண்ணின் - 62
முதனிலை நீடினும் - 61
முரணென் தொழிற் - 42
முற்றிய லுகரமொடு - 9
முன்என் கிளவி - - 48
முன்னுயிர் வருமிடத் - 55
மூவள பிசைத்தல் - 2
மூன்றன் ஒற்றே நகார - 60
மூன்றன் ஒற்றே பகாரம் - 58
மூன்றன் ஒற்றே வகரம் - 59
மூன்றன் ஒற்றே வகார - 61
மூன்றன் ஒற்றே வந்த - 58
மூன்றன் முதனிலை - 60
மூன்றுதலை யிட்ட - 13
மூன்றும் ஆறும் - - 58
மூன்றும் நான்கும் - 60
மெய்ந்நிலைச் சுட்டின் - 4
மெய்யி னளபே - - 2
மெய்யின் இயக்கம் - 6
மெய்யின் இயற்கை - 3
மெய்யின் வழிய - - 3
மெய்யுயிர் நீங்கின் - 18
மெய்யோ டியையினும் - 2
மெல்லெழுத் தாறும் - 12
மெல்லெழுத் தியையின் - 52
மெல்லெழுத் தியையின் - 49
மெல்லெழுத் தியையின் - 50
மெல்லெழுத் தியையின் - 46
மெல்லெழுத்து மிகினும் - 43
மெல்லெழுத்து மிகினும் - 46
மெல்லெழுத்து மிகுவழி - 21
மெல்லெழுத்துறழும்-குளவே 48
மெல்லெழுத் துறழும்
— வழக்கத்தான - 42
மெல்லெழுத்தென்ப - 3
மெல்லொற்று வலியா - 55
மென்மையும் இடைமை - 17
மொழிப்படுத் திசைப்பி - 7
மொழிமுதலாகும் - 19
யகரம் வருவழி - - 54
யகர இறுதி - - - 48
ய,ர,ழ என்னும் புள்ளி - 4
ய,ர,ழ என்னுமுன்றும் - 7
ய,வமுன் வரினே - - 29
யாதென் இறுதியுஞ்-ஞை - 28
யாதென் இறுதி-நிலையும் - 55
யாமரக் கிளவியும் - 32
யாவினா மொழியே - - 56
யாவென் வினையின் - 24
யாவென் வினையும் - 24
ரகார இறுதி - - - 48
லகார இறுதி - - 49
ல-னஎன வரூஉம் - - 19
ல-னஎன வரூஉம் - - 63
வஃகான் மெய்கெடச் - 16
வகரக் கிளவி - - 10
வகார மிசையும் - - 44
வண்டும் பெண்டும் - 55
வரன்முறை மூன்றுங் - 17
வல் என் கிளவி - - 50
வல்லெழுத் தியற்கை - 30

வல்லெழுத்து — மில்லை- 32
வல்லெழுத்து மிகினும் —
வழக்கத்தான - - 34
வல்லெழுத்து முதலிய - 15
வல்லெழுத் தென்ப- - 3
வல்லொற்றுத் தொடர் - 54
வல்லொற்றுத் - மிகுமே - 56
வளியென வரூஉம் - - 33
வன்றொடர் மொழியும் - 54
வாழிய என்னுஞ் - - 29
விசைமரக் கிளவியும் - 38
விண்ணென வரூஉங் - 41
வினையெஞ்சு கிளவிக்கும் 36
வினையெஞ்சு கிளவியும் - 28
வெயிலென் கிளவி - 50
வெரிந் என் இறுதி - - 41
வேற்றுமை குறித்த- - 14
வேற்றுமைக்கண் - - 30
வேற்றுமைக்கண் - - 31
வேற்றுமைக்கண் - - 35
வேற்றுமைக்கண் - - 35
வேற்றுமைக்கண் - - 36
வேற்றுமைக்கண் - - 38
வேற்றுமைக்கண் - ஞன - 40
வேற்றுமைக்கண் — வல்- 19
வேற்றுமைக் குக்கெட - 41
வேற்றுமை யல்வழி ஆய்த 50
வேற்றுமை யல்வழி இ, ஐ 21
வேற்றுமை யல்வழி எண்- 42
வேற்றுமை யல்வழிக்குறு- 47
வேற்றுமை யாயின் ஏனை 44
வேற்றுமையாயின் ஏனை 46
வேற்றுமை வழிய - 15
ழகர உகர - - 36
ழகார இறுதி - - 51
ளகார இறுதி - - 52
ணஃகான் றஃகான் - 16
னகர இறுவாய்ப் - - 2
னகார இறுதி - - 45
னகாரை முன்னர் - 7

# சொல்லதிகாரம்


அ, ஆ, வ-என வரூஉம் - 68
அ, ஆ, வ என வரூஉம் - 100
அ எனப் பிறத்தல் - 84
அசைநிலைக் கிளவி - 108
அச்சக் கிளவிக் - - 83
அச்சம் பயமிலி - - 106
அடிமறிச் செய்தி - - 123
அடைசினை முதல் - - 70
அண்மைச் சொல்லே - 87
அண்மைச் சொல்லிற் - 87
அதற்குவினை உடைமை - 78
அதனின் இயறல் - - 78
அதிர்வும் விதிர்ப்பும் - 114
அது இது உதுவென - 93
அதுஎன் வேற்றுமை - 82
அதுச்சொல் வேற்றுமை - 99
அத்திணை மருங்கின் - 100
அந்தில் ஆங்க - - 108
அந்நாற் சொல்லும் - 122
அப்பொருள் கூறிற் - 71
அமர்தல் மேவல் - - 120
அம்ம என்னும் - - 90
அம்மகேட் பிக்கும் - 109
அம்முக் கிளவியுஞ் - 102
அயல்நெடி தாயின் - 89
அரியே ஐம்மை - - 117
அர்ஆர் பஎன - - 98
அலமரல் தெருமரல் - 113
அவற்றின் வரூஉம் - 111
அவற்றுள் அழுங்கல் - 117
அவற்றுள் இ ஈ ஆகும் - 86
அவற்றுள் இகுமும் - 109
அவற்றுள், இயற்சொல் - 122
அவற்றுள், இரங்கல் - 118
அவற்றுள், ஈயென் - 128
அவற்றுள் எழுவாய் - 76
அவற்றுள் செய்கென் - 98
அவற்றுள் செய்யும் - 103
அவற்றுள், தடஎன் - 114
அவற்றுள், தருசொல் - 71
அவற்றுள் நான்கே - 94
அவற்றுள், நிரனிறை - 123
அவற்றுள் நீ என் - - 96
அவற்றுள் பன்மை - 99
அவற்றுள், பிரிநிலை - 126
அவற்றுள் பெயரெனப் - 91
அவற்றுள் முதனிலை - 102
அவற்றுள் முன்னிலை - 102
அவற்றுள் முன்னிலைக் - 101
அவற்றுள் யாதென - 71
அவற்றுள் விறப்பே - 117
அவற்றுள் வினைவேறு - 74
அவற்றுள் வேற்றுமைத் - 124
அவற்றொடு வருவழி - 103

அவைதாம் அம் ஆம் - 98
அவைதாம் இ உ ஐ ஒ - 86
அவைதாம் உறுதவ - 112
அவைதாம், தத்தங் - 126
அவைதாம், தத்தங்குறிப் 127
அவைதாம் தத்தம் 85
அவைதாம் புணரியல் - 105
அவைதாம் பெண்மை - 94
அவைதாம் பெயர் - 76
அவைதாம், முன்மொழி- 125
அவைதாம் முன்னும் - 106
அவைதாம் வழங்கியல் - 85
அவையல் கிளவி - - 128
அவ்வச் சொல்லிற் - 111
அவ்வழி அவன் இவன் - 91
அவ்வே இவ்வென- - 86
அளபெடைப் பெயரே - 88
அளபெடைப் பெயரே - 88
அளபெடைப் பெயரே - 89
அளபெடை மிகூஉம் - 87
அளவும் நிறையும் - 86
அன்ஆன் அள்ஆள் - 98
அன்மையின் இன்மையின் 99
அன்ன பிறவும் - 83
அன்ன பிறவும் அஃறி - 93
அன்னபிறவும உயர் - 92
அன்ன பிறவும் கிளந்த - 121
அன்னேன் இறுதி - - 87
ஆஒ ஆகும் - - - 97
ஆக ஆகல் என்பது- - 109
ஆக்கக் கிளவி - - 70
ஆக்கந் தானே - - 69
ஆங்க உரையசை - - 109
ஆடூஉ அறிசொல் - - 67
ஆண்மை அடுத்த - - 92
ஆண்மை சுட்டிய - - 95
ஆண்மை திரிந்த - - 69
ஆயென் கிளவியும்- - 99
ஆரும் அருவும் - - 88
ஆறன் மருங்கின் - - 82
ஆறுகுவதே - - 79
ஆனென் இறுதி - - 87
இசைத்தலும் உரிய - 75
இசை நிறை அசைநிலை - 124
இசைபடு பொருளே - 125
இசைப்பு இசை - - 113
இடைச்சொல் லெல்லா - 129
இடைச்சொற் கிளவி - 91
இடையெனப் படுப - 105
இதன திதுவிற் - - 84
இதுசெயல் வேண்டும் - 104
இயற்கைப் பொருளை - 69
இயற்கையின் உடைமை- 79
இயற்சொல் திரிசொல் - 122
இயற்பெயர்க் கிளவி - 72
இயற்பெயர் சினைப் - 94
இயற்பெயர் முன்னர் - 108
இயைபே புணர்ச்சி - 113
இரட்டைக் கிளவி - 73
இரண்டன் மருங்கின் - 82
இரண்டாகுவதே - - 77
இருதிணைச் சொற்கு - 93
இருதிணைப் பிரிந்த- - 91
இருதிணை மருங்கின் - 68
இருபெயர் பலபெயர் - 124
இர்ஈர் மின் என - - 101
இலம்பாடு ஒற்கம் - 118
இறப்பின் நிகழ்வின் - 126

இறப்பின் நிகழ்வின் - 97
இறப்பே எதிர்வே - 105
இறுதியும் இடையும் - 83
இறைச்சிப் பொருள் - 97
இனச்சுட் டில்லாப் - 69
இணைத்தென - 71
இன்றில உடைய - 100
இன்ன பெயரே - 96
ஈதா கொடு எனக் - 128
ஈரள பிசைக்கும் - 109
ஈற்றுநின் றிசைக்கும் - 110
ஈற்றுப்பெயர் - 82
உகப்பே உயர்தல் - 113
உகரந் தானே - 87
உசாவே சூழ்ச்சி - 119
உணர்ச்சி வாயில் - 121
உம்உந் தாகும் - 111
உம்மை எச்சம் - 127
உம்மை எண்ணின் - 111
உம்மை எண்ணும் - 110
உம்மை தொக்க - 111
உயர்திணை யென்மனார் - 67
உயர்திணை மருங்கின் - 125
உயாவே உயங்கல் - 119
உரிச்சொல் மருங்கினும் - 129
உரிச்சொற் கிளவி - 112
உருபுதொடர்ந் - 83
உருபென மொழி - 70
உருவுட் காகும் - 112
உரையிடத் தியலும் - 129
உவமத் தொகையே - 124
உளஎனப் பட்ட - 90
எச்சம் சிறப்பே - 106
எச்ச உம்மையும் - 110
எஞ்சிய கிளவி - 101
எஞ்சிய மூன்றும் - 127
எஞ்சிய இரண்டின் - 89
எஞ்சுபொருட் கிளவி - 110
எடுத்த மொழி - 75
எண்ணுங் காலும் - 73
எண்ணே காரம் - 110
எதிர்மறுத்து - 84
எதிர்மறை எச்சம் - 127
எப்பொருள் - 71
எய்யா மையே - 116
எல்லாச் சொல்லும் - 90
எல்லாத் தொகையும் - 125
எல்லாம் என்னும் - 95
எல்லாரும் என்னும் - 92
எல்லே இலக்கம் - 108
எவ்வயிற் பெயரும் - 76
எவ்வயின் வினையும் - 126
எழுத்துப்பிரிந் திசைத் - 121
எறுழ் வலியாகும் - 120
எற்றென் கிளவி - 107
எனஎன் எச்சம் - 127
என்றும் எனவும் - 111
என்றென் கிளவி - 107
ஏபெற் றாகும் - 113
ஏயும் குரையும் - 108
ஏழாகுவதே - 80
ஏற்றம் நினைவும் - 116
ஏனை உயிரே - 87
ஏனைக் காலமும் - 105
ஏனைக் கிளவி - 96
ஏனைப் புள்ளி - 87
ஏனையிரண்டும் - 71
ஏனை யுருபும் - 85

ஏவன யெச்சம் - - 102
ஐந்தாகுவதே - - 79
ஐயமும் கரிப்பும் - - 120
ஐயுங் கண்ணும் - 84
ஐவியப் பாகும் - 120
ஒப்பில் போலியும் - 109
ஒருபெயர்ப் பொதுச் - 73
ஒருபொருளிருசொல் - 130
ஒருபொருள் — கிளவி - 122
ஒரு பொருள் — இலவே- 72
ஒருமை சுட்டிய எல் - 95
ஒருமை சுட்டிய பெயர் - 130
ஒருமை யெண்ணின் - 73
ஒருவரைக் கூறும் - - 70
ஒருவர் என்னும் - - 96
ஒருவினை ஒடுச்சொல் - 81
ஒழியிசை எச்சம் - - 127
ஒன்றறி கிளவி - - 68
ஒன்றறி சொல்லே - 67
ஒன்றன் படர்க்கை - 100
ஒன்றுவினை மருங்- - 74
ஓம்படைக் கிளவிக் - 82
ஒய்தல் ஆய்தல் - - 115
ஔவும் உவ்வும் - - 86
கடதற என்னும் - - 98
கடிஎன் கிளவி - - 120
கடிசொல்இல்லைக்- - 129
கண்கால் புறம்அகம் - 80
கண்டீர் என்ற - - 125
கண்ணும் தோளும் - 75
கதழ்வும் துணைவும் - 114
கமம் நிறைந்திய - - 117
கம்பலை சும்மை - - 117
கயஎன் கிளவி - - 114
சருமம் அல்லாச் - - 81
கருவி தொகுதி - - 117
கவர்வு விருப் - - 118
கவவு அகத்- - - 118
கழிவே ஆக்கம் - - 106
கழுமென் கிளவி - - 117
கள்ளொடு சிவணும் - 93
கறுப்பும் சிவப்பும் - - 119
கன்றலும் செலவும் - 81
காப்பின் ஒப்பின் - - 77
காலந் தாமே - - 97
காலம் உலகம் - - 75
கிளந்த அல்ல - - 86
கிளந்த அல்ல - - 112
கிளந்த இறுதி - - 89
கு ஐ ஆன்என - - 84
குடிமை யாண்மை - 74
குத்தொக வரூஉம் - - 83
குருவும் கெழுவும் - - 113
குறித்தோன் கூற்றந் - 74
குறிப்பினும் வினையினும் 97
குறைச்சொற் கிளவி - 129
குறைத்தன வாயினும் - 129
கூர்ப்பும் கழிவும் - - 114
கூறிய கிளவிப் - - 121
கூறிய முறையின் - - 77
கெடவரல் பண்ணை - 114
கேட்டை என்றா - - 126
கொடுவென் கிளவி உயர் 128
கொடுவென் கிளவிபடர்க் 128
சொல்லே ஐயம் - - 108
சாயல் மென்மை - - 115
சிதைந்தன வரினும் - 122
சிறப்பின் ஆகிய - - 72

| | | | |
|---|---|---|---|
| சினைநிலைக் கிளவிக் | 81 | தாமென் கிளவி | 95 |
| சீர்த்தி மிகுபுகழ் | 113 | தாவென் கிளவி | 128 |
| சுட்டுமுத லாகிய | 72 | தாவே வலியும் | 116 |
| சுட்டுமுதற் பெயரும் | 89 | தானென் கிளவி | 95 |
| சுட்டுமுதற் பெயரே | 89 | தானென் பெயரும் | 88 |
| சுண்ணம் தானே | 123 | திணையொடு பழகிய | 97 |
| செந்தமிழ் சேர்ந்த- | 122 | தீர்தலும் தீர்த்தலும் | 114 |
| செப்பினும் வினாவினும் | 69 | துயவென் கிளவி | 119 |
| செப்பும் வினாவும் | 69 | துவன்று நிறை | 115 |
| செப்பே வழீஇயினும் | 69 | துவைத்தலும் சிலைத் | 118 |
| செயப்படு பொருளைச் | 105 | தெவுக்கொளற் | 116 |
| செயற்கைப்பொருளை | 69 | தெவ்வுப்பகை | 116 |
| செய்து செய்யுச் | 102 | தெரிநிலை யுடைய- | 93 |
| செய்தென் எச்சத்- | 104 | தெரிபுவேறு | 91 |
| செய்யாய் என்னும் | 128 | தெளிவின் ஏயும் | 107 |
| செய்யுள் மருங்கினும் | 130 | தேற்றம் வினாவே | 107 |
| செலவினும் வரவினும் | 70 | தொழிலிற் கூறும் | 88 |
| செல்லல் இன்னல் | 113 | தொழிற்பெய ராயின் | 88 |
| செழுமை வளனும்- | 117 | நம்பும் மேவும் | 115 |
| சேரே திரட்சி | 118 | நளியென் கிளவி | 114 |
| சொல்லெனப் படுப | 91 | நனவே களனும் | 119 |
| சொல்லென் எச்சம் | 127 | நன்றீற் றேயும் | 110 |
| ஞெமிர்தலும் பாய்தலும் | 118 | நன்று பெரிதாகும் | 116 |
| தகுதியும் வழக்கும் | 69 | நான்காகுவதே | 78 |
| தஞ்சக் கிளவி | 108 | நிகழூஉ நின்ற | 94 |
| தடவும் கயவும் | 114 | நிரனிறை சுண்ணம் | 123 |
| தடுமாறு தொழிற் | 82 | நிலப்பெயர் குடிப் | 92 |
| தத்தம் எச்சமொடு | 103 | நிலனும் பொருளும் | 103 |
| தநநு எனை | 90 | நிறத்துரு உணர்த் | 119 |
| தநநு எனும் | 123 | நின்றாங் கிசைத்தல் | 75 |
| தன்மேற் செஞ்சொல் | 127 | நீயிர் நீஎன | 96 |
| தன்மை சுட்டலும் | 70 | நும்மின் திரிபெயர்- | 89 |
| தன்மை சுட்டிற் | 96 | நொசிவும் நுழைவும் | 119 |
| தன்மைச் சொல்லே | 72 | பசப்பு நிறனாகும் | 113 |
| தன்உள் ளுறுத்த | 96 | படரே உள்ளல் | 116 |

பணையே பிழைத்தல் - 116
பண்புகோள் பெயரும் - 88
பண்புகோள் பெயரும் - 88
பண்புதொக வரூஉம் - 125
பயப்பே பயனும் - - 113
பரவும் பழிச்சும் - - 120
பலவயி னானும் - - 73
பல்ல பலசில - - 93
பல்லோர் படர்க்கை - 102
பழுதுபய மின்றே - - 115
பன்முறை யானும்- - 103
பன்மை சுட்டிய - - 95
பன்மையும் ஒருமையும் - 101
பன்மையும் ஒருமையும் - 99
பன்மையும் ஒருமையும் - 100
பன்மையும் ஒருமையும் - 100
பாலறி மரபின் - - 99
பான்மயக் குற்ற - - 70
பிணையும் பேணும்- - 116
பிண்டப் பெயரும் - - 81
பிரிநிலை வினாவே - - 107
பிரிநிலை வினையே - 126
பிறிதுபிறி தேற்றலும் - 83
பின்முன் கால் - - 102
புதிதுபடற் பொருட்டே - 119
புலம்பே தனிமை - - 115
புள்ளியும் உயிரும் - - 90
புனிறேன் கிளவி - - 119
பெண்மை சுட்டிய உயர் - 67
பெண்மை சுட்டிய எல் - 95
பெண்மை சுட்டிய - 94
பெண்மைச் சினைப் - 94
பெண்மை முறைப் - - 95
பெயரினாகிய - - - 76
பெயரினும் தொழி - - 73
பெயரேஞ்சு கிளவியும் - 103
பெயர்எஞ்சு கிளவி - 127
பெயர்நிலைக்கிளவிகாலங் 77
பெயர்நிலைக் கிளவியின்- 128
பே நாம் உரும்என - 118
பையுளும் சிறுமை- - 116
பொருட்குத் திரிபில்லை - 121
பொருட்குப் பொருள் - 121
பொருண்மை சுட்டல் - 76
பொருண்மை தெரி- - 90
பொருளொடு புணராச் - 72
பொருள்தெரி மருங்கின் - 123
பொற்பே பொலிவு- - 116
மகரஉ மருங்கிற் - - 96
மதவே மடனும் - - 119
மல்லல் வளனே - - 115
மழவும் குழவும் - - 113
மறைக்குங் காலை - - 128
மற்றென் கிளவி - - 107
மற்றைய தென்னுங் - 107
மன்றஎன் கிளவி - - 108
மன்னாப் பொருளும் - 71
மாஎன் கிளவி - - 108
மாதர் காதல் - - 115
மாறைக் கிளவியும் - 98
மாலை இயல்பே - - 114
மிகுதியும் வனப்பும் - 119
மிக்கதன் மருங்கின் - 104
மியாஇக மோமதி - - 108
முதலிற் கூறும் - - 85
முதலும் சினையும் - - 81
முதல்முன் ஐவரிற் - - 81
முதற்சினைக் கிளவிக் - 81
முந்நிலைக் காலமுந் - 104
முரஞ்சல் முதிர்வே- - 115

| | | | |
|---|---|---|---|
| முழுதேன் கிளவி - | - 115 | வார்தல் போகல் - | - 114 |
| முறைப்பெயர்க் கிளவி - | 88 | வாள் ஒளியாகும் - | - 118 |
| முறைப்பெயர்க் கிளவி - | 89 | வியங்கோள் எண் - | - 73 |
| முறைப்பெயர் மருங்கின்- | 87 | வியலென் கிளவி - | - 118 |
| முற்படக் கிளத்தல்- | - 72 | விரைசொல் லடுக்கே | - 125 |
| முற்றிய உம்மைத் - | - 110 | விழுமம் சீர்மையும் | - 117 |
| முனைவு முனிவாகும் | - 120 | விளைவின் றில்லை | - 107 |
| முன்னத்தின் உணரும் | - 129 | விளைவே காலம் - | - 106 |
| முன்னிலை சுட்டிய- | - 130 | விளிஎனப் படுப - | - 86 |
| முன்னிலை முன்னர் | - 129 | விளிகொள்வதன் கண் | - 76 |
| முன்னிலை வியங்கோள்- | 101 | விறப்பும் உறப்பும்- | - 117 |
| மூன்றனும் ஐந்தனும் | - 82 | விறவுத் தொடுப்பே - | - 69 |
| மூன்றுகுவதே - | - 78 | வினைஎஞ்சு கிளவிக்கு | - 127 |
| மெய்பெறக் கிளந்த | - 120 | வினைஎஞ்சு கிளவியும் | - 129 |
| மொழிப்பொருட்கார | - 121 | வினைஎனப் படுவது | - 97 |
| மொழிமாற் றியற்கை | - 123 | வினையிற் றோன்றும் | - 68 |
| யாஅர் என்னும் - | - 99 | வினையினும் பண்பினும்- | 89 |
| யாகா பிறபிறக் - | - 109 | வினையின் தொகுதி | - 124 |
| யானுக் கவினும் - | - 120 | வினையே குறிப்பே- | - 107 |
| யாதன் உருபிற் - | - 84 | வினையே செய்வது- | - 85 |
| யாதுஎவன் என்னும் | - 71 | வினையொடு நிலை - | - 111 |
| ரஃகான் ஒற்றும் - | - 68 | வினைவேறு படாஅப் | - 74 |
| வடசொற் கிளவி - | - 122 | வினைவேறு படூஉம் | - 74 |
| வண்ணத்தின் வடிவின் | - 124 | வெம்மை வேண்டல் | - 115 |
| வண்ணம் வடிவே - | - 79 | வெளிப்படு சொல்லே | - 112 |
| வம்புநிலை யின்மை | - 115 | வேறுவினைப் பொதுச் | - 73 |
| வய வலியாகும் - | - 118 | வேற்றுமை தாமே | - 76 |
| வயாஎன் கிளவி - | - 119 | வேற்றுமைத் தொகை | - 124 |
| வறிது சிறிதாகும் - | - 116 | வேற்றுமைப் பொருளை | - 80 |
| வன்புற வரூஉம் - | - 115 | வேற்றுமை மருங்கிற் | - 85 |
| வாராக் காலத்தும் நிகழுங் | 104 | வையே கூர்மை - | - 120 |
| வாராக் காலத்து வினைச் | | ளஃகான் ஒற்றே - | - 68 |
| சொற் - - | - 105 | னஃகான் ஒற்றே - | - 68 |
| வாரா மரபின - | - 125 | னரலள என்னும் - | - 87 |

# கா. நமச்சிவாய முதலியார்

## பதிப்பு:

**தொல்காப்பியப் பாயிரங்கள்:** இதில் ஆத்திரேயன் பேராசிரியன் செய்த பொதுப்பாயிரமும் அதன் உரையும், பனம்பாரனார் செய்த சிறப்புப்பாயிரமும் அதற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் செய்த வுரைகளும் சிவஞானமுனிவர் செய்த பாயிரவிருத்தியும் அடங்கியுள்ளன.

**தொல்காப்பியம் மூலம் - எழுத்தும், சொல்லும்:** இது, ஒவ்வொரு சூத்திரமும் முதலிய பொருளைத் தலைப்பில் அமைத்து, கடின சந்திகளைப் பிரித்துப் பாடபேதங்கள் காட்டிப் பதிக்கப்பட்டுள்ளது.

**தொல்காப்பியம் மூலம் - பொருள்:** [அச்சில்]

**தொல்காப்பியம் - பொருளதிகாரம்:** இஃது இளம்பூரணர் செய்த அரிய உரையுடன் கூடியது. அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரண்டு இயல்கள் சேர்ந்தது முதற் பகுதி; களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய மூன்று இயல்கள் சேர்ந்தது இரண்டாம் பகுதி; மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்கள் சேர்ந்தது மூன்றாம் பகுதி. முதற் பகுதி வெளிவந்துள்ளது. மற்றவை விரைவில் வெளிவரும்.

**இறையனார் களவியல்:** இறையனார் அகப்பொருள் என்றும் பெயர்பெற்ற இந்நூல் பிழையற ஆராய்ந்து பதிக்கப்படுகிறது. அரிய குறிப்புக்கள் பலவற்றைக் கொண்டுளது. [அச்சில்]

**பத்துப்பாட்டு மூலம்:** சங்கம் மருவிய நூற்றொகைகளுள் முதன்மைபெற்ற இந்நூல் முழுதும் கடின சந்திகள் பிரித்துப் பதிக்கப்பட்டது.

**நக்கீரர்:** இவர் இயற்றிய பாட்டுக்களையும் நூல்களையும் தொகுத்து இவரது வரலாறு, நூல்களின் ஆராய்ச்சி முதலிய செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன.